பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 02 சனிக்கிழமை (15-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 172

15 MAY 2004

### அரசுத் தரப்பின் காய் நகர்த்தலால்

# தமிழ்க் கூட்டமைப்பினர் இக்கட்டான நிலையில்!

## செவ்வாயன்று பிரதி சபாநாயகர் தெரிவில் எவ்வாறு நடந்துகொள்வது என்பதில் குழப்பம்

கொழும்பு,மே15

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பது தொடர்பான சமாதான முயற்சிகளில் கடைசி நேரத்தில் - அவசர அவசரமாக - அரசுத் தரப்பு மேற்கொண்ட காய் நகர்த்தல்களால் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இக்கட்டான நிலையில் சிக்கியிருக்கின்றனர். அடுத்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் பிரதி சபாநாயகர் தெரிவில் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்று தீர்மானிக்கமுடியாமல் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தடுமாறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிகின்றது.**

கடந்த மாதம் 22ஆம் திகதி இடம்பெற்ற சபாநாயகர் தெரிவின் போது தமிழ்க் கூட்டமைப்பினர் எதிரணி வேட்பாளரான ஐ.தே.கட்சியின் லொக்கு பண்டாரவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால், அவர் ஒரேயொரு மேலதிக வாக்கினால் அரசுத் தரப்பு வேட்பாளரைத் தோற்கடித்தார்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக புதிய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்காததே அரசுத் தரப்புக்கு எதிராக தாங்கள் வாக்களித்தமைக்கு முக்கிய காரணம் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் அப்போது தெரிவித்திருந்தனர்.

சபாநாயகர் தேர்தலில் தமது தரப்பு தோல்வியுற்ற உடனேயே - ஒரு சில மணி நேரத்துக்குள் - அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் நட

(16ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரருக்கு நினைவுக்கல் நடுகை

யாழ்ப்பாணம்,மே15

கடந்த 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதியன்று நெடுந்தவுக் கடற்பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த லெப்ரினன்ட் தமிழினியன் என்று அழைக்கப்படும் மகேந்திரபுரம், பாஷையூரைச் சேர்ந்த பாலையா ஜெயச்சந்திரனின் நினைவுக்கல், நேற்று மாலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுகை செய்யப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல நினைவு மண்டபத்தில் லெப்.தமிழி

(16ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிளை வழிமறித்து நடு வீதியில் போட்டு எரிப்பு!

### நகரில் நள்ளிரவு பெரும் பரபரப்பு


யாழ்ப்பாணம்,மே15

யாழ்.நகரில் மனோகரா தியேட்டர் சந்தியில் நேற்று நள்ளிரவு மோட்டார் சைக்கிள் ஒன்றை வழிமறித்த நபர்கள் அதில் வந்தவரைத் தாக்கித் தூக்கி வீசிவிட்டு மோட்டார் சைக்கிளை நடுவீதியில் போட்டுத் தீக்கிரையாக்கினர்.

இரவு நேரம் மோட்டார் சைக்கிள் சுவாலை விட்டு எரிந்ததால் அப்பகுதியில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மனோகரா சந்தியூடாக மோட்டார் சைக்கிளில் சென்ற இந்த நபரை வழிமறித்த குழுவொன்று அவரை பலாத்காரமாக வெள்ளை வான் ஒன்றில் ஏற்றிச் சென்று கடுமையாகத் தாக்கிய பின்னர் அந்நபரை மீண்டும் அதே இடத்தில் கொண்டு சென்று

(16ஆம் பக்கம் பார்க்க)





எரிந்து கருகிய நிலையில் கிடக்கும் 'பல்ஸர்' ரக மோட்டார் சைக்கிளை முதல் படத்திலும் அதன் எஞ்சிய பாகங்களை பொலீஸார் எடுத்துச் செல்வதை அடுத்த பீடத்திலும் காணலாம். *(படங்கள்: ரமா, பிரதீ)*

## கதிர்காமருக்கு முரண்பாடானவரிடம் சமாதானச் செயலகத்தின் பொறுப்பு!

இலங்கை அரசின் சமாதானச் செயலகத்திற்குப் பொறுப்பான செயலாளர் நாயகமாக பிரபல இராஜதந்திரி ஜயந்த தனபாலவை நியமித்திருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

இவர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரோடு பல்வேறு விடயங்களில் நேரடியான முரண்பாடு கொண்டவர். அத்தகையவரை ஜனாதிபதி குமாரதுங்க மேற்படி பதவிக்கு நியமித்திருக்கிறார் என்பது கொழுமபு அரசியல் வட்டாரங்களில் எதிர்பாராத அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, இதுவரை காலமும் லக்ஷ்மன் கதிர்காமர் இருந்தது போன்ற ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பதவியில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராகவும் ஜயந்த தனபால நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

அவர் நேரடியாக ஜனாதிபதியின் கீழ் பணியாற்றுவார் என்று விசேடமாகக் குறிப்பிட்டு ஜனாதிபதி செயலகம் அறிவித்திருப்பது, ஜனாதிபதி தவிர்ந்த ஏனைய அரசுத் தலைவர்கள் - கதிர்காமர் போன்றோர் - ஜயந்த தனபால மீது அரசியல் அதிகாரம் செலுத்தமுடியாது என்பதையும் - நோர்வே அனுசரணையாளர்கள் இனிமேல் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக கதிர்காமருடன் அல்லது ஜயந்த தனபாலவுடனேயே தொடர்பு கொள்வார்கள் என்பதையும் -

வெளிப்படுத்துவதாக விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

(16ஆம் பக்கம் பார்க்க)

### 47 அகதிகள் தலைமன்னார் வருகை

மன்னார்,மே15

இந்தியாவில் இருந்து படகுகள் மூலம் நாடு திரும்பிய 47 அகதிகளை அவர்களுடைய சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இந்திய மீன்பிடிப் படகுகள் மூலம் நாடு திரும்பிய 47 பேரும் கடலில் மணல் பட்டியில் இறக்கிவிடப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் அவர்களை அங்கிருந்து காப்பாற்றிய தலைமன்னார் மீனவர்கள் அவர்களைக் கரைக்கு அழைத்து வந்து கடற்படையினரிடம் ஒப்படைத்தனர். கடற்படையினர் அவர்களைப் பொலீஸாரிடம் நேற்றுக்காலை கையளித்தனர்.

இவர்களைக் கரைக்குக் கொண்டு வந்த மீனவர்களும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### குளிக்கச் சென்றபோது அனர்த்தம்

## கிணற்றடியில் கண்ணி வெடித்து ஒருவர் பலி; மற்றவர் படுகாயம்!

### ஓட்டுசுட்டானில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம்,மே15

குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றபோது அங்கு புதையுண்டிருந்த கண்ணிவெடி வெடித்ததில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். இன்னொருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் ஒட்டுசுட்டான், கணேசபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் மூங்கிலாறு உடையார்கட்டைச் சேர்ந்த சந்திரன் செபஸ்ரியன் (வயது 18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். மற்றய இளைஞரான தேராவில் உடையார்கட்டைச் சேர்ந்த மகேந்திரன் சிவகுமார் (வயது 17) என்பவர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து அவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டு சேர்க்கப்பட்டார்.

இந்த இளைஞர்கள் இருவரும் ஓட்டுசுட்டானில் 'நியாப்' திட்டத்தின்

(16ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சியின் முன்நகர்வை பொறுத்தே அமெரிக்காவின் உதவி

### கொழும்பில் அந்நாட்டுப் பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு,மே15

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்கா தனது பொருளாதார உதவிகளை இலங்கைக்கு வழங்கும்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான பிரதி அமைச்சர் கிரிஸ்டினா றொகா நேற்று கொழும்பு, அமெரிக்க மத்திய நிலையத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆயுதங்களைக் களைந்து அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் தமது அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையில் எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் சரி - சமாதான ரீதியில் பேச்சுக்களை மேற்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பும் எந்த அரசுக்கும் - அமெரிக்கா உதவிபுரியும்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நாநூறு கோடி டொலர் உதவி வழங்க முன்வந்துள்ளோம். இது தொடர்பாக ஆராய்ந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

# மாணவியைக் கடத்திய சம்பவம்: ஐவருக்கும் விளக்கமறியல்

## ஒருவருக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை

நீராவியடிப் பகுதியில் நேற்றுமுன் தினம் பரீட்சை முடித்துச் சென்ற மாணவி ஒருத்தியைக் ஹைஸ்-ஏஸ் வானில் கடத்திச் சென்ற சமயம் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட ஐவரையும் எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டிருக்கிறார்.

இச்சம்பவத்தில் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட எம்.ஜெனார்த்தனன் (கொக்குவில் மேற்கு), எஸ்.பிரதாபன் (தாவடி தெற்கு), ரி.சிறீமோகன் (ஆரிய குளம்), கே.சிறிஜெனகன் (திருநெல்வேலி தெற்கு), ஆர்.உசாந்தன் (பண்டாரிக்குளம், வவுனியா) ஆகியோர் நேற்று மாலை நீதிவான் முன்பாக ஆஜர்செய்யப்பட்டனர்.

ஐந்தாவது நபர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் பொலீஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெறுகின்றார் என பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

சிறைச்சாலைக் காவலின் பாதுகாப்புடன் பிரஸ்தாப நபரை ஆஸ்பத்திரியில் தடுத்துவைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

பொதுமக்களின் தாக்குதலுக்கு இலக்காகியதால் உடல் நோ ஏற்பட்டிருப்பதாகவும் தங்களை வைத்திய சாலையில் அனுமதிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்றும் ஏனைய நால்வரும் நீதிவானிடம் கோரினர்.

பிரஸ்தாப நபர்களை சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி உத்தரவிட்ட நீதிவான் -

வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டும் என சட்ட வைத்திய அதிகாரி சிபார்சு செய்தார். அவரின் ஆலோசனைப்படி உரிய நடவடிக்கையை எடுக்குமாறு பொலீஸாருக்குத் தெரிவித்தார்.

இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கூறப்படும் ஏனைய மூவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யும்படியும் நீதிவான பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-3)

# பிரபாவை நாடு கடத்துமாறு புதிய இந்திய அரசு கோரும்!

## கதிர்காமர் வெளியிடும் கருத்து இது!!

இந்தியாவில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வரவிருக்கும் காங்கிரஸ் கட்சி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நாடு கடத்தக் கோருவது தொடர்பான பிரச்சினையை எழுப்பும் என எதிர்பார்க்கலாம் - இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் அமெரிக்காவில் வைத்து இவ்வாறு கூறினார்.

தமது ஐந்து நாள் அமெரிக்க விஜயத்தின் கடைசி நாளான நேற்று முன்தினம் வாஷிங்ரனில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

'பிரபாகரனை நாடு கடத்துமாறு இலங்கையை இந்தியா நெருக்குமா? என்ற கேள்விக்குப் பதிலளித்த கதிர்காமர், "அதற்குப் பதில் கூறுவது கஷ்டம், ஆனால் வரும் மாதங்களில் அத்தகைய கேள்வி நிச்சயமாக எழும் என்று நான் துணிந்து கூறுவேன்" - என்றார்.

"பிரபாகரனை நாடு கடத்தக் கோரும் விடயம் இன்னும் மேசை மேல்தான் உள்ளது. அது வாபஸ் பெறப்படவில்லை.

"இதுவரை ஆட்சியில் இருந்த பாரதீய ஜனதாக் கட்சியும் அதே நோக்கத்தைத்தான் கொண்டிருந்தது. ஆனால், நாடு கடத்துவதைச் செயற்படுததும்படி அது வற்புறுத்தவிலலை.

"ஏனென்றால் தனது நட்பு நாட்டில் சமாதானப் பேச்சுக்கள் நடந்து வருவதை அது கவனத்தில் எடுத்திருந்தது.

"புலிகளின் தலைவரை நாடு கடத்தும்படி இந்திய அரசு கோருமானால் தற்போதைய அமைதி முயற்சிகளில் அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை என்னால் முன்னரே மதிப்பிடமுடியாது." - என்றும் கதிர்காமர் கூறினார்.

"பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கை இந்தியாவிடமிருந்து வலியுறுத்தப்படும் சமயம், அதை அசட்டை செய்யும்படி புலிகளும் வற்புறுத்தினால் என்ன செய்வீர்கள்?"- என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு -

"அத்தகைய நிபந்தனை எதனையும் அவர்கள் (புலிகள்) வைத்தால் அது முட்டாள் தனமாகவும் புரிந்து கொள்ள முடியாததாகவும் இருக்கும்"- என்று பதிலளித்தார் கதிர்காமர்.(க)

### கண்ணிகளை தடைசெய்வது பற்றி கலந்துரையாடும் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே15

ஆள்களுக்கு எதிரான கண்ணிகள் புதைப்பதைத் தடை செய்வது தொடர்பான செயலமர்வு ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வமத சமாதான அமைப்பு, ஜெனீவா 'ஹோல்' நிறுவனம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இந்தச் செயலமர்வை நடத்துகின்றன.

இந்தச் செயலமர்வில் சர்வமத சமாதான அமைப்பைச் சேர்ந்த வண. பிரடிடி அல்விஸ், வண. அஸாஜி தேரர், ஜெனீவா ஹோல் அமைப்பைச் சேர்ந்த கத்றினா க்றெமர் அம்மையார் உட்பட பத்துப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் செயலமர்வில் பங்கேற்பர். (ஐ-3)

## சமாதானப் பேச்சுக்களில்

# அரசுத் தரப்பில் காட்டப்படும் திடீர் அவசரம் அரசியல் சித்து விளையாட்டு எனச் சந்தேகம்

## அமெ. பிரதி அமைச்சரிடம் கூட்டமைப்பினர் தெரிவிப்பு

கொழும்பு,மே15

"ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுளள சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மக்களிடையே சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் திடீரென அரசு காட்டும் அவசரம் அரசியல் சித்து விளையாட்டாக இருக்கலாம் என்று கூட மக்கள் கருதுகின்றனர்.

"இந்தச் சந்தேகத்தை நீக்கும் வகையில், வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக பேச்சைக் காலந்தாழ்த்தாமல் நடத்தி முடிக்கவேண்டும். இதைச் சர்வதேச சமூகம் உறுதிசெய்ய வேண்டும்"

- இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதிச் செயலாளர் கிறிஸ்டினா றொக்காவிடம் தமிழ்க் கூட்டமைப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நேற்றுக் காலை 9 மணி முதல் ஒரு மணி நேரம் இச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், ஜோசெப் பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் கூட்டமைப்பினர் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் உள்ள மக்களின் மனிதாபிமான மற்றும் அவசரப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். அந்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர்களிடம் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. அமைச்சர்கள் உறுதிமொழிகளை வழங்குகிறார்கள். சில சமயங்களில அமைச்சர்களின் அலுவலக வாசல்களில் தூங்க வேண்டியும் ஏற்படுகின்றது. ஆனாலும், உருப்படியாக எவையும் இடம்பெறுவதில்லை. அமைச்சர்கள் மூலம் இவ்விவகாரத்தை நிறைவேற்ற முடியாது.

இந்நிலையை நீக்கவேண்டுமானால், வடக்கு - கிழக்கு மக்கள் தமது பணிகளைத் தாமே செய்யக்கூடிய நிலை ஏற்படவேண்டும். இதற்காகவே வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்று அவசரமாகத் தேவையாகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் அரசு பேச்சு நடத்த எடுத்துள்ள முயற்சி தொடர்பாக வடக்கு - கிழகரு மக்களுக்கு சந்தேகம் இருக்கின்றது.

எதிர்வரும் 18ஆம் திகதி பிரதி சபாநாயகர் தெரிவின்போது நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நடுநிலை வகிக்கச் செய்வதற்கு - அல்லது அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய கூட்டத்தில் உதவிகளைப் பெறுவதற்கு - இந்தச் சமாதான முயற்சியில் அவசரம் காட்டப்படுகின்றது என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

உண்மையாக - நேர்மையுடன் - இதயசுத்தியுடன் - இந்தப் பேச்சு முயற்சி முன்னெடுக்கப்படுகின்றதா? அல்லது இது வெறும் அரசியல் சித்து விளையாட்டா? - என்ற கேள்வி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

எனவே, மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகங்களை நீக்கும் வகையில், நேர்மையுடன், உண்மையுடன் இந்தப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டும். இந்தப் பேச்சுக்களை இழுத்தடித்துக்கொண்டு செல்லாமல், இடைக்கால நிர்வாகக் கட்டமைபபை விரைந்து அமைக்க இணக்கம் காண வேண்டும். அப்படி நடப்பதை சர்வதேச சமூகம் உறுதி செய்யவேண்டும் - என்று தெரிவித்தனர்.

இந்தக் கருத்தை கவனத்தில் எடுத்து சம்பந்தப்பட்டவர்களுடன் தாம் பேச்சு நடத்துவார் என்று கிறிஸ்டினா றொக்கா பதில் அளித்தார்.

கொழும்பில் பல தலைவர்களுடன் கலந்துரையாடிவரும் அவர் இன்று சனிக்கிழமை திருகோணமலைக்குச் செல்கிறார். (க-3)



இலங்கைக்கு வருகைதந்துள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதிச் செயலாளர் கிறிஸ்டினா றொககா நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அவரது அலுவலகத்தில் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

# அமுனுகமவின் தலைமையில் அரச தரப்பின் பேச்சுக்குழு

## மங்கள, தனபால, சுஹைர், விக்ரமரட்ண ஆகியோரும்

விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படும் சமாதானப் பேச்சுக்களில் அரசுத் தரப்பில் பங்குபற்றும் உறுப்பினர்களின் விவரம் பற்றிய தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

நிதி அமைச்சர் சரத் அமுனுகம தலைமையிலான இக்குழுவில் அமைச்சர் மங்கள சமரவீர, அரசின் சமாதானச் செயலகத்தின் புதிய செயலாளர் நாயகமாகப் பதவியேற்கவிருக்கும் ஜயந்த தனபால, பிரபல சட்டத்தரணி ஜயந்த விக்ரமரட்ண, சட்டத்தரணி சுஹைர் ஆகியோர் இடம்பெறுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

அரசின் சார்பில் பேச்சுக்களில் பங்குபற்றுவோரின் பட்டியலில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பெயர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சுக்களில் பங்குபற்றும் மற்றைய தரப்பான விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஒத்துவராத ஒருவரை அரசதரப்புக் குழுவில் இடம்பெறச் செய்வதன் மூலம் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையைக் குழப்புவதறகு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பவில்லை என்று தெரியவருகிறது. (க)

## பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம்

யாழ்பாணம்,மே15

யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு சேவையையும் பிற சேவைகளையும் தனியார் மயமாக்க எடுக்கப்படும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரி பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை நேற்று மேற்கொண்டது.

அவசர சேவைகள் தவிர்ந்த ஏனைய சகல பிரிவு ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சகல ஊழியர்களும் நேற்றுக் கூடி கூட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த காலங்களில் நடந்த பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற விடயம் உட்படப் பாதுகாப்புச் சேவை மேலதிகக் கொடுப்பனவு ஆகியன தொடர்பாக எட்டுத் தீர்மானங்களை ஊழியர்கள் எடுத்துள்ளனர்.

இந்தத் தீர்மானங்களை அடுத்த 14 நாள்களுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும் -

நிறைவேற்றாத பட்சத்தில் தொடர் வேலைநிறுத்தத்தில் குதிப்போம் என்றும - ஊழியர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-3-6-173)

# புனரமைப்புக்கு உதவும் கடன்கள் செலான் வங்கியில் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மே15

குடாநாட்டில் யுத்தத்தால் சேதமடைந்த வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றை மீளப் புனரமைக்க உதவுவதற்காக விசேட கடன் திட்டங்களை செலான் வங்கி மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

செலான் வங்கி பொது முகாமையாளர் அஜித் பஸ்குவல் இத்தகவலைத் தெரிவித்தார்.

செலான் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை ஆரம்பிக்கப்பட்டு இருவருடங்கள் இன்று பூர்த்தியாகின்றன. அதை ஒட்டி அவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இந்த மாநாட்டில் பிரதிப் பொது முகாமையாளர் இந்திரபால டி சில்வா, உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.நிரஞ்சன், யாழ். கிளை முகாமையாளர் கே.கனகசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வங்கியின் செயற்பாடுகள் தொடர்பாக அஜித பஸ்குவல் விளக்கமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

விவசாயம், கடற்றொழில்துறை அபிவிருத்திக்காக ஏற்கனவே பல கடன்களை வழங்கி வருகின்றோம்.

அத்துடன், சுயதொழில் முயற்சிக்கும் கடன் வழங்கி வருகிறோம்.

நவீன வசதிகளை வங்கியில் ஏற்படுத்தியுள்ளோம். இதன்மூலம் மக்கள் சாவதேச ரீதியில் தமது சேவைகளை எளிதில் பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிட்டும்.

நாடு முழுவதும் 92 கிளைகள் இயங்குகின்றன. மேலும் 7 கிளைகள புதிதாக அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரியிலும் சங்கானையிலும் கிளைகளை அமைக்க மத்திய வங்கியிடம் அனுமதி கோரியுள்ளோம். அனுமதி கிடைத்ததும் விரைவில் அக்கிளைகள் இயங்க ஆரம்பிக்கும் - என்றார் அவர். (ஐ-3)




செலான் வங்கியின் எதிர்காலச் செயற்பாடுகளை விளக்குவதற்கான பத்திரிகையாளர் மாநாடொன்று நேற்று நல்லூர் கைத்தொழில் வணிக மன்றத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

செலான் வங்கியின் பொதுமுகாமையாளர் அஜித் பஸ்குவல் தமது செயற்பாடுகள் பற்றி விளக்குவதையும் அருகில் செலான் வங்கி பிரதிப் பொது முகாமையாளர் இந்திரபால டி சில்வா, செலான் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் ப.கனகசிங்கம் மற்றும் பிராந்திய முகாமையாளர் எஸ்.நிரஞ்சன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம் : வசந்தன்)

உலக அரங்கில்

# நஜாப் நகர மயானங்களுக்குள் அமெரிக்கப் படையினர் பிரவேசம்

## கிளர்ச்சியாளர்களைத் தேடி வேட்டை

நஜாப்,மே15

ஈராக்கின் நஜாப் நகரின் பாரிய மயானங்கள் உள்ள பகுதிகளுக்குள் அமெரிக்க டாங்கிப் படைகள் நேற்று பெரும் எடுப்பில் நகர்த்தப்பட்டுள்ளன.

மயானங்களில் உள்ள மனிதப்புதை குழிகளுக்கிடையில் மறைந்துகொண்டு தாக்குதல் நடத்திவரும் கிளர்ச்சிக் காரர்களின் பதுங்குமிடங்களை அழித் தொழிப்பதற்காகவே அமெரிக்கப் படைகள் இந்த நடவடிக்கையை எடுத் துள்ளன.

ஈராக்கிய கிளர்ச்சியாளர்களை வழிநடத்துவதாகக் கருதப்படும் ஷியா சமயத்தலைவர் மொக்டாடா அல்-சதார் என்பவருக்கு எதிராகவே இந் தப்பாரிய நடவடிக்கை என்று கருதப் படுகின்றது.

கர்பால புனித நகர் பகுதியிலும் புதிதாக மோதல்கள் இடம்பெற்றிருப் பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


அமெரிக்க பாதுகாப்பு அமைச் சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் நேற்று முன்தினம் பக்தாத்திலுள்ள அபுகிராவ்ப் சிறைச்சாலைக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இந்தச் சிறையில் வைத்தே ஈராக்கிய கைதி களை அமெரிக்கப் படையினர் கொடூ ரமான முறையில் சித்திரவதைப்படுத தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட் டுள்ளது. சிறைச்சாலையில் இடம்பெற் றதாகக் கூறப்படும் குற்றச் செயல் களால், ஈராக்கில் அமெரிக்கா எடுத் துள்ள செயற்பாடுகள் சிதறடிக்கப்பட்டு விடமாட்டா என்று ரம்ஸ் பீல்ட் கூறி யுள்ளார்.

அதிகாலை வேளையில் குறைந் தது மூன்று அமெரிக்க டாங்கிகள் நஜாப் மயானத்துக்குள் நுழைந்து வெகுதூரம் சென்றன. இந்தப் பாரிய மயானத்துக்குள் உலகம் முழுவதி லுமுள்ள ஷியா முஸ்லிம்கள் தாம் இறந்தால் புதைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள்.

மயானத்தில் கிளர்ச்சியாளர்களின் பதுங்குகுழிகள், மறைவிடங்கள் என்று கருதப்பட்ட இடங்கள் எல்லா வற்றையும் அமெரிக்க டாங்கிப்படை கள் குண்டுவீசித் தகர்த்தன.

கிளர்ச்சியாளர்களும் ரொக்கட் கள் மூலம் குண்டுகளை வீசி எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள்.

சதார் மறைந்திருப்பதாகக் கரு தப்படும் இமாம் அலிதர்கா உட்பட புனிதமான இடங்களைக் கூடிய வரை தவிர்க்க முயல்வதாக அமெரிக்கப்படை யினர் அறிவித்துள்ளனர். (ப-8)



ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் உள்ள மயானம் ஒன்றில் அமெரிக்கப் படையினர் தாக்குதலை ஆரம்பித்ததையடுத்து அது புகை மண்டலமாகக் காட்சியளிப்பதை படத்தில் காணலாம்.

## அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஈராக்குக்குத் திடீரென விஜயம்

பக்தாத்,மே15



அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கிற்கு திடீர் விஜ யம் மேற்கொண்டார்.

ஈராக்கியக் கைதிகள் மோசமாகத் துன் புறுத்தப்பட்ட அபு கிராய்ப் சிறையையும் அவ நேரில் சென்று பார்வையிட்டார்.

எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் ரம்ஸ் பீல்ட் பக்தாத் வந்து சேர்ந்தார். அவருடன் அமெரிக்கப் படைகளின் தலைமை அதிகாரி யான ஜெனரல் ரிச்சர்ட் மயோர்ஸூம் வந்திருந் தார். அவர்கள் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படை களின் தளபதிகளைச் சந்தித்து உரையாடி னர். வாஷிங்ரனில் இருந்து வெளியாகும் சாதகமற்ற கருத்துக்களை 'வெட்டி யாடலாம்' என்பதற்கான தெளிவான சமிக்ஞை தளபதிகளுக்கு வழங்கப்பட் டுள்ளது.

பொதுமக்களின் கண்கள் உங்களை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின் றன என்பதைச் சொல்வதற்கே தானும் ஜெனரல் மயோர்ஸூம் ஈராக் வந்தனர் என்று ரம்ஸ்பீல்ட் சிப்பாய்கள் மத்தியில் தெரிவித்தார்.

"நீங்கள் உங்களை எதிர்கொள்ளும் பயங்கரங்களைச் சொல்லுங்கள். முக்கியமாக நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று கூறுங்கள் அது மிக உயர்வான பணி" - என்றார்.

ஈராக்கியச் சிறைகளில் அமெரிக்கர்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டது தொடர்பான செய்திகளும் படங்களும் வெளியான நிலையில் ரம்ஸ்பீல்ட்டின் ஈராக் விஜயம் இடம் பெற்றுள்ளது.

கைதிகள் துன்புறுத்தப்பட்ட விவகாரத்துக்கு பொறுப்பேற்று ரம்ஸ்பீல்ட் பதவி விலக வேண்டும் என்று ஜனநாயகக் கட்சியினர் வலியுறுத்தி வரு கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வெனிசுலா ஆட்சியை கவிழ்க்க சதி; இதுவரை 100 பேருக்குமேல் கைது!

கராகஸ்,மே15

வெனிசுலா அதிபர் ஹூகோ சேவ ஸின் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற் சியில் ஈடுபட்டனர் என்று குற்றச்சாட் டில் மேலும் 3 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இச்சதி தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

உலகப் பணக்காரர்கள் வரிசை யில் இடம்பிடித்துள்ள கஸ்டேலோ சிஸ்னெராஸூக்குச் சொந்தமான பண் ணையில் அரச அதிகாரிகள் சோத னையிட்டனர்.

வெனிசுலா இராணுவ அமைச்சர் ஜோர்ஜ் கர்சியா இது தொடர்பாகக் கூறியதாவது:-

இதுவரை நடைபெற்ற 20 சோத னைகளில் நிறைய ஆவணங்கள் கிடைத்துள்ளன. வெனிசுலாவின் பொதுவாழ்வில் முக்கியமான சிலர் மீது சந்தேகம் தோன்றியுள்ளது. தொழில் அதிபர்களும் பத்திரிகை முத லாளிகளும் இதில் அடங்குவர் என் றார் கர்சியா.

வெனிசுலா அதிகாரிகள் ஞாயிற் றுக்கிழமை நடத்திய ஒரு சோதனை யில் ஆட்சியைக் கவிழ்க்கும் சதி அம்பலமானதாகக் கூறப்படுகிறது. அச்சோதனையின் போது கொலம்பி யாவைச் சேர்ந்த தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப்பட்டார்கள்.

## பாகிஸ்தான் இடைத்தேர்தலில் வன்முறைகள் அதிகரிப்பு

கராச்சி,மே15

பாகிஸ்தானில் நடந்த இடைத் தேர்தலில் வன்முறை வெடித்தது. அடையாளம் தெரியாத சிலர் துப்பாக் கியால் சுட்டதில் 6 பேர் பலியானார் கள்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில 3 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் ஒரு சட்ட சபைத் தொகுதிக்கும் இடைத் தேர்தல் நடந்தது.

இதேவேளை,

கராச்சி நகரில் அடையாளம் தெரி யாத சிலர் அரசுக்கு ஆதரவாக முட் டாஹிடா குவாமி இயக்கத்தினரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். இதில் அந்தக் கட்சியின் இருவர் பலி யானார்கள். அவர்களது எதிரிகளான முட்டா ஹிடா - மஜ்லிஸ் இ.அமல் கட்சியி னர் இருவர் உட்பட 4 பேர் பலியானார்கள். அவர்கள் யார் என்பது அடையாளம் தெரியவில்லை. 20 பேர் காயம் அடைந்தனர்.

இதைப் பொலீஸ் தலைவர் தாரிக ஜமீல் உறுதிப்படுத்தினார்.

## காஸாவில் வீடுகளைத் தகர்க்க இஸ்ரேலியப் படைகளுக்கு அதிகாரம்

ரெல்அவிவ்,மே15

காஸா பிரதேசத்தின் தென்பகுதி யான ராவாவிலுள்ள நூற்றுக்கணக் கான வீடுகளை தகர்த்து அழிப்பதற் கான அதிகாரம் இஸ்ரேலிய படை களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக இஸ் ரேலிய வானொலி அறிவித்தது.

கடந்த நான்கு தினங்களாக ராவா பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் 12 பலஸ்தீனியர்களும் ஐந்து இஸ் ரேலிய படையினரும் கொல்லப்பட் டுள்ளனர்.

வீடுகள் அழிக்கப்படவிருப்பது குறித்து பலஸ்தீன அதிகாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செயலைத்தடுத்து நிறுத் தும்படி அவர்கள் சர்வதேச சமூகத் துக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீடுகளைத் தகர்க்கும் யோசு னையை பலஸ்தீன அகதிகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் ஐ.நா. அதி காரி போல் மைக்கன் கண்டித்தி ருக்கிறாகள்.

வீடுகள் தகர்க்கப்படுவதற்கான உத்தரவு வழங்கப்பட்டிருப்பதை இஸ் ரேலிய பிரதமரின் காரியாலய அதி காரி ஒருவரும் உறுதிப்படுத்தியுள் ளார். (ப-8)

## கிளின்டன் சுயசரிதை எழுதுகிறார்

நியூயோர்க்,மே15

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன் 'மை லைப்' என்ற பெயரில சுயசரிதை எழுதி வருகிறார்.

இது குறித்து நியூயோர்க்கில் கலந்துகொண்ட ஒரு விழாவில் கிளின் ரன் கூறுகையில், என்னுடைய வீட்டி லுள்ள 'ரைட்டர்ஸ் ஜெயிலில்' (எழுத் தாளர் சிறை) தற்போது நான் சிறைப் பட்டுள்ளேன் - என்றார்.

## அமெரிக்க கிறிஸ்தவ அமைப்புகளுக்கு இஸ்ரேலில் எதிர்ப்புக் கிளம்புகிறது

ஜெருசலேம்,மே15

இஸ்ரேலுக்கு கோடிக்கணக்கான டாலர்கள் நிதியுதவி செய்யும் அமெ ரிக்காவில் உள்ள கிறிஸ்தவ மத அமைப்புகளுக்கு இஸ்ரேலில் எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

யூதர்களை மதம் மாற்றுவதே அமெரிக்க கிறிஸ்தவர்களின் முக் கிய நோக்கம் என்று ஒரு பக்கத் தில் யூத மத அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. மற்றொரு பக்கத்தில் சமாதான விரும்பிகளும் அமெரிக்க மத அமைப்புகளை எதிர்க்கின்றனர்.

இஸ்ரேலிய தீவிரவாதிகளுக்கு கிறிஸ்தவ அமைபுக்கள் வழங்கும் ஆதரவு பலஸ்தீனர்களுடன் சமரசம் செய்துகொள்ளத் தடையாக உள் ளது என்ற கோணத்தில் அமைதிக் காகப் பாடுபடும் இயக்கங்கள் கிறிஸ தவ நிறுவனங்களை எதிர்க்கின்றன.

பொருளாதார ரீதியிலும் அரசி யல் ரீதியிலும் அமெரிக்காவில் உள்ள கிறிஸதவர்களை இஸ்ரேல் நம்பியுள்ள நிலை பற்றியும் விவாதம் எழுந்துள் ளது.

இஸ்ரேலில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்குப் பெருமளவு நிதி வழங்கும் அமெரிக்க கிறிஸ்தவர்கள் முக்கிய பிரச்சினைகளில் இஸ்ரேல் அரசுக்கு தங்கள் நாட்டில் ஆதரவு திரட்டுகின்றனர்.

யூதர்கள் யேசு கிறிஸ்துவை நம்ப வேண்டும் அல்லது அழிய வேண்டும் என்று ஒரு கிறிஸ்தவ அமைப்பு பேசி வருவது இஸ்ரேலியர்களுக்கு மனக் கசப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நகர மேயரை சுட்டுக்கொன்றார் கிறிஸ்தவ பாதிரியார்

மெச்சிக்கோ,மே15

தென் அமெரிக்காவில் உள்ள மெக்ஸிகோ நாட்டில் சால்பாட் லாஹாக் நகரில் மதவிழாவையொட்டி ஒரு விருந்து நடந்தது. இதில் நகர மேயர் லோரென்சோ ரூய்ஸ், கிறிஸ் தவ பாதிரியார் ஹைரென்சோ கியூல் லர் ஆகியோர் கலந்துகொண்டனர். இருவரும் மது அருந்தினர்.

திடீரென இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது பாதிரியார் துப்பாக்கியை எடுத்து மேஜரை சுட்டுக் கொன்றுள்ளார்.

## சிரியா மீது பொருளாதாரத் தடை அமெரிக்கா பிரகடனப்படுத்தியது

வாஷிங்ரன்,மே15

சிரியாநாடு தீவிரவாதிகளுக்கு ஆத ரவு வழங்குகின்றது என்று குற்றஞ் சாட்டும் அமெரிக்கா அதன் மீது பொருளாதாரத் தடையைப் பிரகட னப்படுத்தியுள்ளது. தனது நாட்டில் உள்ள சிரியாவின் சொத்துக்கள் அனைத்தையும் முடக்கி வைத்துள் ளது.

ஈராக் அருகே உள்ளது சிரியா, வெளிநாட்டு தீவிரவாதிகள் ஈராக் குள் நுழைய வசதி செய்து கொடுப் பதாகவும், தீவிரவாதிகளுக்கு ஆத ரவு கொடுப்பதாகவும் அதன் மீதும் அமெரிக்கா குற்றஞ்சாட்டி வந்தது.

சிரியா, தன்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அமெ ரிக்கா அந்தநாட்டுடன் பேச்சு நடத் திப் பார்த்தது. அமெரிக்காவின் கவ லையை சிரிய ஜனாதிபதியிடம் அமெ ரிக்க வெளிநாட்டு அமைச்சா கொலின் பவல் வலியுறுத்தினார்.

ஆனால், சிரியா தன் போக்கை மாற்றிக்கொள்ளவே இல்லை.

இதனால், அந்த நாட்டின்மீது பொருளாதாரத் தடையைப் பிரகட னம் செய்வது என்று அமெரிக்கா தீர்மானித்துள்ளது. அது எப்போது என்பது மட்டும் தீர்மானம் ஆகாமல் இருந்தது.

இந்நிலையில், கடந்த சில நாள் களாகவே சிரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை அறிவிக் கும் என்ற செய்தி உலவிவந்தது. இதை உண்மையாக்கும் விதத்தில் சிரியா மீது அமெரிக்கா பொருளா தாரத்தடையை பிரகடனப்படுத்தியது.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் பொருள்களை சிரியாவுக்கு ஏற்று மதி செய்வதற்கும், சிரியா விமானங் கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற் கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள்கள், மருந்து ஆகி யவற்றின் ஏற்றுமதிக்கு மட்டும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள சிரியா நாட்டின் அரசாங்க சொத்துக்கள் மற்றும் சில குறிப்பிட்ட தனிநபர் களின் சொத்துக்கள் என்பன முடக் கப்படும் என்றும் வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

தீவிரவாதிகளை சிரியா ஆதரித்து வந்ததும், லெபனானில் இராணு வத்தை தொடர்ந்து நிறுத்தி வருவ தும், பேரழிவு ஆயுதங்களை பதுக்கி இருப்பதும், ஈராக்கில் அமைதி ஏற் படுத்த அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளுக்கு தடையாக இருப் பதும் தான் இந்த நடவடிக்கைக்கு காரணம் என்று வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடை அநீதியானது என்றும், சிரியா மீது எந்தப் பாதிப்பையும் இது ஏற் படுத்தாது என்றும் சிரியா பிரதமர் முகமது நஜ்ஜோ ஒட்டேரி கூறினார்.

முஸ்லிம் தீவிரவாதிகளான ஹமாஸ், ஹிஸ்புல்லா இயக்கத்தின ருக்கு அளித்துவரும் ஆதரவை சிரியா கைவிடாவிட்டாலும், லெபனானிலி ருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ளாவிட்டாலும் பொருளாதாரத் தடை மேலும் இறுக்கமாக்கப்படும் என்று வெள்ளை மாளிகை அறிவித் துள்ளது.

இந்தத் தடை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது சிரியா நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும் என்றும் அமெ ரிக்கா கூறியுள்ளது. (8)




உடுப்பிட்டி நவிண்டிலைச் சேர்ந்த

**அருட்செல்வன் - அமுதா** தம்பதிகளின்

அருமைப் புதல்வி செல்வி **அ. அலைக்ஷா** தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (15. 05. 2004) சனிக்கிழமை வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார்.


இவரை இலங்கையிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, இத்தாலியில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, மாமா மற்றும் சுவிஸில் உள்ள உறவினர்களும் மற்றும் இலங்கையிலுள்ள உற்றார், உறவினர்கள் அனைவரும் வாழ்த்துக்கின்றார்கள்.

தகவல் : மு.சசிக்குமார்
(அன்பு மாமா)

(31980)









ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் கடந்த புதன்கிழமை இலங்கைக்கான ஜப்பானிய தூதரால் திறந்துவைக்கப்பட்டன. வைத்தியசாலையின் பெயர்ப் பலகையையும் திறந்துவைக்கப்பட்ட கட்டடங்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் 2004.05.18ஆம் நாள் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்குச் சமுகம் தரவும்.

## பணிநிலை:

### 01. ஆய உதவியாளர் (புளியங்குளம்)

கல்வித் தகைமை:
க.பொ.த. (சா/த) இல் 04 பாடங்களில் சித்தி
சம்பள அளவுத்திட்டம்:-
$\frac{3080-4180}{10 \times 110} + 2000$

### 02. ஆய அலுவலர் (புளியங்குளம்)

கல்வித் தகைமை:
க.பொ.த. (உ/த) இல் 03 பாடங்களில் சித்தி
சம்பள அளவுத்திட்டம்:-
$\frac{3630-4730}{10 \times 110} + 2000$

### 03. உள்ளகக் கணக்காய்வாளர் (புளியங்குளம்)

கல்வித் தகைமை:
க.பொ.த. (உ/த) இல் வர்த்தகப் பிரிவில் சித்தி
சம்பள அளவுத்திட்டம்:-
பயிலுநர் 3000+ 2000

### 04. எரிபொருள் களஞ்சியக் காப்பாளர்

கல்வித் தகைமை:
க.பொ.த. (உ/த) இல் சித்தியடைந்திருத்தல்
அல்லது
க.பொ.த. (சா/த) உடன் 02 ஆண்டுப் பணிப் பட்டறிவு
சம்பள அளவுத்திட்டம்:-
பயிலுநர் 3000+ 2000

### 05. வரவேற்பாளர்

கல்வித் தகைமை:
க.பொ.த. (உ/த) இல் 3 பாடங்களில் சித்தி
(ஆங்கில அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது)
சம்பள அளவுத்திட்டம்:-
$\frac{3300-4300}{10 \times 100} + 2000$

### 06. மொழிபெயர்ப்பாளர்

கல்வித் தகைமை:
க.பொ.த. (சா/த) உடன் சிங்கள, ஆங்கில மொழிகள் எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். சம்பளம் தகைமைக்கேற்பப் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி-34993) (24-12-42)

உதயன்

## உண்மையான மாற்றமா?

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் எத்தனத்தில் அண்மைய சில நாள்களில் ஏற்பட்டுள்ள திடீர்த் திருப்பங்கள் அவதானிகளை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியிருக்கின்றன.

தடைப்பட்டிருக்கும் அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக சில அடிப்படை நிலைப்பாடுகளை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்திவந்தனர். அதில் மாற்றங்களுக்கோ விட்டுக்கொடுப்புகளுக்கோ இடமில்லை என்பதே அவர்களின் உறுதியான நிலையாகவும் இருந்தது.

ஆனால், இலங்கை அரசுத் தரப்பிலோ இவ்விவகாரத்தில் நாளொரு வண்ணமும் பொழுதொரு தோற்றமுமாக - குழப்பமான - முன்பின் முரணான - கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்தன.

தற்போது ஆட்சியை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஒன்றரை மாதத்துக்கு முன்னர் - அதாவது பொதுத் தேர்தலுக்கு முன்னர் - ஒருவிதமாகக் கருத்தை வெளியிட்டது. தேர்தலின் பின் - அரசு அமைத்ததும் - அதன் சுருதி மாறத் தொடங்கியது. யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு தனது போக்கையும் மாற்ற அது தயாரானது. அப்படியிருந்தும் சமாதானப் பேச்சுக்கான புலிகளின் அடிப்படை நிலைப்பாடுகளுக்கும் அரசின் நிலைப்பாடுகளுக்கும் இடையில் இணங்கி வரமுடியாத பெரிய இடைவெளி இருப்பதாகவே செய்திகள் வெளியாகி வந்தன.

இந்தப் பின்னணி நிலைமையில் கடந்த 72 மணித்தியாலங்களில் பாரிய மாற்றம்; அடுத்தடுத்துத் திருப்பங்கள். விளைவு...?

இப்போதைக்கு - ஏன் எப்போதைக்குமே - தொடங்காது என எதிர்பார்க்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் இப்போது எப்போதுமே தொடங்கலாம் என்ற அதிரடி நிலைமை - மாற்றமான நிலைமை - ஏற்பட்டிருக்கின்றது.

பேச்சை ஆரம்பிப்பது தொடர்பான புலிகளின் அடிப்படை நான்கு நிலைப்பாடுகளையும் ஒரேயடியாக ஏற்று, அனைவரையும் அதிர்ச்சியில் மூழ்க வைத்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

விடுதலைப் புலிகளே ஈழத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள், சமாதானப் பேச்சுகளில் புலிகளுக்கு அரசோடு சம பங்காளி அந்தஸ்து, புலிகளுடன் மட்டுமே பேச்சு, தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டுமே ஆரம்பத்தில் பேசுவது - என்ற நான்கு நிலைப்பாடுகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரேயடியாக இணங்கிவிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்தத் தலைகீழ் மாற்றப்போக்கை ஆரோக்கியமான ஒரு திருப்பமாகப் பார்க்காமல் பெரும் சந்தேகத்துடனேயே தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களும் பார்க்கின்றார்கள் என்பது ஐயத்துக்கு இடமற்ற உண்மை.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் பேச்சு ஆரம்பிப்பதற்கான இணக்க நிலை ஏற்பட்டுள்ளமை பற்றிய செய்தி வெளியாகிய கையோடே இந்தச் சந்தேகம் பற்றியும் தமிழ்த் தலைவர்கள் பிரஸ்தாபித்திருக்கின்றார்கள். நேற்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விடயங்களுக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவைச் சந்தித்த சமயம், தமிழ்த் தலைவர்கள் தங்களின் சந்தேகத்தை அப்பட்டமாகவே அவரிடம் வெளியிட்டிருக்கின்றார்கள்.

பிரதிச் சபாநாயகரைத் தெரிவுசெய்வதற்காக எதிர்வரும் செவ்வாயன்று நாடாளுமன்றம் கூடுகின்றது. சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிகளிடம் கோட்டை விட்ட இந்த அரசு, பிரதி சபாநாயகர் பதவியையும் இழந்தால் அதன் ஆட்சியே அடியோடு கேள்விக்குறியாகிவிடும்.

பிரதி சபாநாயகர் தெரிவில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் 22 பேரையும் நடுநிலைமை வகிக்க வைத்தால், தனது தரப்பின் வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என்பது ஜனாதிபதியின் எண்ணம். உண்மையும் அதுதான்.

அதேபோன்று ஜூன் முதல் வாரத்தில் பிரஸல்ஸில், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அமைப்பின் இணைத் தலைமையை வகிக்கும் நான்கு நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கைக்கு உதவி வழங்குவது குறித்து ஆராய ஒன்று கூடுகின்றார்கள். அதற்கு முன் இலங்கையில் சமாதான முயற்சிகள் ஆரோக்கியமான திசையில் நகரும் என்ற நம்பிக்கைக் கீற்றை ஏற்படுத்தினாலேயே பெரும் நிதிப்பற்றாக்குறையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு, கொஞ்ச நஞ்ச வெளிநாட்டு உதவியாவது கிடைக்க, வாய்ப்பு ஏற்படும்.

பிரதிச் சபாநாயகர் தெரிவு, உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய கூட்டம் ஆகியவற்றை இலக்கு வைத்தே ஜனாதிபதி இவ்வளவு தலைகீழ் மாற்ற நிலையை - அதுவும் அவசர அவசரமாக - எடுத்தார் என்ற சந்தேகம் தமிழர்களுக்கு.

சமாதான முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன என்பதைக் காட்டுவதற்காக - எல்லா விட்டுக்கொடுப்புகளையும் மேற்கொண்டு - 'போக்கு'க் காட்டிவிட்டு மீண்டும் தனது பழைய முகத்தை ஜனாதிபதி காட்டுவார் என்ற ஐயம் தமிழர் தரப்பில் நீடிக்கிறது. அவர்களின் கடந்த கால அனுபவத்தின் பிரதிபலிப்பு அது.

எது, எப்படியென்றாலும் இவ்விடயங்களில் சாதாரண அரசியல் கட்சிகளுடன் அல்ல - விடுதலைப் புலிகளுடன் - தாம் ஈடுபடுகின்றார் என்பதை அவர் மறக்காமல் இருந்தால் அவருக்கு நல்லது.

# 'நியாப்' திட்டம் II இன் கீழ் அறுநூறு கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும்

## அவற்றில் யாழ்ப்பாணத்தில் 150 கிராமங்கள்

யாழ்ப்பாணம்,மே15

வடக்கு - கிழக்கு மாகாணம் மற்றும் அவற்றின் எல்லை மாவட்டங்கள் என்பவற்றிலிருந்து தெரிவுசெய்யப்படும் 600 கிராமங்கள் 'நியாப்' திட்டம் II இன் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கான நிதி உதவி உலக வங்கியின் 'நியாப்' திட்டத்தின்கீழ் பெறப்படவுள்ளது.

கொழும்பில் கடந்த 11ஆம், 12ஆம் திகதிகளில் நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்த மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்களும், வடக்கு - கிழக்குப் பகுதி எல்லை மாவட்டங்களான அனுராதபுரம், பொலனறுவை, புத்தளம் மற்றும் மொனராகலை ஆகிய நான்கு மாவட்டங்களின் அரச அதிபர்களும், 'நியாப்' திட்டத்தின் திட்டமிடல் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

அடுத்த 6வருடங்களை எல்லையாகக் கொண்டு வடக்கு - கிழக்குப் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுததுவதற்கு 800கோடி ரூபா நிதியை உலக வங்கி வழங்கவுள்ளது.

இந்த நிதி உதவியுடன் வடக்கு - கிழக்குப் பகுதியிலும் அதன் எல்லைகளாகவுள்ள புத்தளம், மொனறாகலை, பொலனறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்படும் 600 கிராமங்களில் விவசாய நடவடிக்கைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்திலிருந்து 150 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அப்பகுதிகளின் சமூக, பொருளாதார நடவடிக்கைகள் விருத்திசெய்யப்படவுள்ளன.

இதேவேளை -

இப்பகுதியிலுள்ள 5 பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் அவசரக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கும் இந்த மாநாட்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி மாவட்டத்தில் இரணைமடுக்குளம், மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளம், திருமலை மாவட்டத்தில் அல்லைக்குளம், மட்டக்களப்பு மாவட்டத்தில் ருபம் நீர்ப்பாசனக் குளம் மற்றும் அம்பாறையில் கஜபாகுக்குளம் ஆகிய 5 பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் அவசரக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.(ஐ-5)

**புதிய அரசின் பழிவாங்கல் படலம் தொடர்கிறது**

# இந்து கலாசார அமைச்சில் பணியாற்றிய 20 யாழ். இளைஞர், யுவதிகள் பணிநீக்கம்!

யாழ்ப்பாணம்,மே15

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சில் அமைய அடிப்படையில் பணியாற்றிய குடாநாட்டைச் சேர்ந்த 20 அலுவலர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது பணிநீக்கம் தொடர்பான கடிதங்கள் விவசாய சந்தைப்படுத்தல், அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள், தமிழ் மொழிமூலப் பாடசாலைகள், வடக்கு தொழில் பயிற்சி அமைச்சின் செயலாளர் கே.மகானந்தனின் கையொப்பத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

பணிநீக்கம் தொடர்பாகப் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தமது பரிதாப நிலையை விளக்கி பத்திரிகைகளுக்குச் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் இந்துசமய விவகாரத்துறைக்கென தனியானதோர் அமைச்சு உருவானபோது, அமைச்சில் நிலவிய பதவிவெற்றிடங்களுக்கென, முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் எழுதுநர், கணனி இயக்குநர், சிற்றூழியர் போன்ற பல பதவிகளுக்கு இளைஞர், யுவதிகளை நியமனம் செய்திருந்தார்.

ஏறத்தாழ இரு வருடங்கள் அந்த அமைச்சில் பணிபுரிந்த நாம் முன்னைய அமைச்சு மேற்கொண்ட பாரிய செயற்திட்டங்களான 2ஆவது உலக இந்துமாநாடு, தேசிய தீபாவளி தினக் கொண்டாட்டம் போன்றவற்றில் எமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தோம். எமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே நாம் பணிபுரிந்தோம். எனினும் எம்மைப் பணிநீக்கம் செய்தமை அதிர்ச்சி தருவதாய் உள்ளது. இவ்விடயம் தொடர்பாக நேரில் விளக்கமளிப்பதற்கு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்க நாம் எடுத்த முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்துவிட்டன - என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகத்தர்கள், அரசியல் ரீதியாக பழிவாங்கப்படவோ, பணிநீக்கம் செய்யப்படவோ மாட்டார்கள் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருந்த போதிலும் எம்மை பணிநீக்கம் செய்தமை நட்டாற்றில்விட்ட நிலையை ஏற்படுத்தி உள்ளது என்று பட்டதாரியான யுவதி ஒருவர் தெரிவித்தார்.

எமது பணிநீக்கம் தொடர்பாக அறிந்துகொண்ட பெற்றோர் மிகவும் வேதனையும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர் என வேலையிழந்த இளைஞர் ஒருவர் குறிப்பிட்டார்.

(எ)

# திக்கம் வடிசாலை மீண்டும் பனை, தென்னை வள சங்கத்திடம்

## கையளிக்கப்பட்டது என அறிவிப்பு

கரவெட்டி,மே15

திக்கம் வடிசாலை வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்திடம் மீளவும் கையளிக்கப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலை 2001ஆம் ஆண்டு முதல் வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கண்காணிப்பின் கீழ் செயற்பட்டுவந்தது.

பின்னர் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் குடியமர்வு அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் கீழ் திக்கம் வடிசாலை கொண்டுவரப்பட்டது.

அதன் பின்னர், ஐக்கிய தேசியக்கட்சிக்காலத்தில் இந்து கலாசார அமைச்சின்கீழ் இந்த வடிசாலை கொண்டுவரப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தவர்களும், கொத்தணி நிர்வாகிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர் எனக்கூறப்பட்டது. அத்துடன், இது விடயமாகப் பல்வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டன. எனினும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

இதற்கிடையில் ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியில் இந்த வடிசாலையை கொத்தணியிடம் ஒப்படைக்குமாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார். அதற்கமைவாக கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வடமராட்சி பனை தென்னைவள கொத்தணியிடம் மீண்டும் திக்கம் வடிசாலை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-5-70)

# தீர்வை விலக்களித்த பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தின் விலையில்

## இன்று முதல் நடைமுறையில் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே15

ஆயப்பகுதியின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினால் அண்மையில் தீர்வை விலக்களிக்கப்பட்ட பொருள்களை உற்பத்தி நிறுவனத்தினால் பொறிக்கப்பட்ட விலைக்கு வியாபார நிறுவனங்களில் விற்பனை செய்வது இன்று சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வருவதாக விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவின் பொறுப்பாளரினால் யாழ். வணிகர்கழகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், கீழ்க்காணும் பொருள்கள் யாவும் இன்று முதல் உற்பத்தி நிறுவத்தினால் பொறிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படவேண்டும் என்று சகல வியாபார நிலையங்களுக்கும் வணிகர்கழகம் அறிவித்துள்ளது.

குழந்தைகளுக்கான பால்மா மற்றும் உணவு வகைகள், மருந்துப்பொருள்கள், வேளாண் உள்ளீடுகள், கால்நடை உணவு மற்றும் மருந்து வகைகள், கனியுப்புக்கலந்த நீர், மாணவர் பயிற்சிப்புத்தகங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள், படங்கள், செய்தித்தாள்கள், புத்தகங்கள், நாவல்கள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், என்பனவற்றுக்கே தீர்வை விலக்களிக்கப்பட்டுள்ளது. (எ-10)

**நாளை**

வைகாசி 03
ஞாயிற்றுக்கிழமை
(16.05.2004)
திதி : துவாதசி
காலை 7.05 வரை.
நட்சத்திரம் : ரேவதி
பகல் 3.23 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 8.53 - 10.23
ராகுகாலம்: 4.23 - 5.53
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும். வாசல்கள் தோறும் வேதனை இருக்கும்.

# பல்கலைப் பட்டச் சான்றிதழ்கள் வழங்குவது பற்றி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 23 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழ் நாளைமறுதினம் திங்கட்கிழமையில் இருந்து வழங்கப்படவுள்ளது என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

பட்டச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள வருபவர்கள் தமது மாணவர் அடையாள அட்டையினையும் பட்டம் பெறுவதற்காகப் பெற்ற அங்கிகள் போன்றவற்றை மீள ஒப்படைத்ததற்கான உறுதிச் சீட்டினைச் சமர்ப்பித்து சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பரீட்சைகளும், அனுமதிகளும் கிளையில் பெற்றுக்கொள்ளவும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ-ரி)

# வட்டியில்லாக் கடன் அடிப்படையில் நடமாடும் பலகார வண்டிகள்

## வழங்குவதற்கு சமுர்த்திச் சங்கம் ஏற்பாடு

வலி. தெற்கு,மே15

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்திச் சங்கப் பயனாளிகளுக்கு இரண்டாம் கட்டமாக நடமாடும் பலகாரவண்டிகளும், வியாபார நிலையங்களுக்கான தளபாடங்களும் வட்டி இல்லாக் கடனடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

வட்டியில்லாக் கடனடிப்படையில் ஒரு பயனாளிக்கு பலகார வண்டிலும், நான்கு பயனாளிகளுக்கு வியாபார நிலையங்களுக்கான தளபாடங்களும் வழங்கப்படவுள்ளன எனக் கூறப்பட்டது.

பலகாரவண்டிக்கான கடன் [illegible]யை மூன்று வருடகாலத்திலும், கடைகளுக்கான தளபாடங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை இரண்டு வருடத்திலும் இப்பயனாளிகள் மீளக் கட்டிமுடிக்க வேண்டும். (எ-152)




# நெடுந்தீவு பிரதேச சபை
## வீதி திருத்த வேலைக்கான
## கேள்வி அறிவித்தல் - 2004

நெடுந்தீவு பிரதேச சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட (இக்ராட்) ஒப்பந்தகாரரிடமிருந்தும் உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்தும் ஒப்பந்த வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. 17-05-2004ஆம் திகதி முதல் 30-05-2004ஆம் திகதி பகல் 10.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 31-05-2004ஆம் திகதியன்று பிற்பகல் 1.00 மணிவரை சேர்க்கப்படலாம். அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் பரிசீலிக்கப்படும். கேள்விகளை ஏற்கவும் நிராகரிக்கவும் கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு. கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர்கள் சமுகமளித்திருக்கலாம். கேள்விகள் இணைப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியை *'செயலாளர், பிரதேசசபை, நெடுந்தீவு'* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'* என்ற முகவரிக்கும் அதே நாளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காகித உறையின் மேல் வேலையின் பெயரை எழுதி கேள்விப்பத்திரம் 2004 எனக் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும். விவரங்கள் பிரதேச சபையில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப் படாதது | வற்வரி பற்றி அலுவலகத்தில் அறியலாம் |
|---|---|---|---|---|
| 1. | குடவிலி வீதி திருத்தவேலை | ரூபா 3,700/= | ரூபா 250/= | - |
| 2. | சாறாப்பிட்டி வீதி திருத்தவேலை | ரூபா 2,500/= | ரூபா 250/= | - |
| 3. | றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி வீதி | ரூபா 2,500/= | ரூபா 250/= | - |

**எஸ்.பி.தில்லைநாதன்,**
செயலாளர்,
பிரதேசசபை, நெடுந்தீவு.

*பிரதேசசபை அலுவலகம் நெடுந்தீவு,*
*திகதி 14-05-2004.*

(C/34990)(42-11-32)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 27 - 06 - 1941



விண்ணில் 16 - 04 - 2004

## திருமதி து.இராஜேஸ்வரி

வையத்துள் வந்துதித்து - எம்
இதயங்களில் இடம் தந்து
நற்தலைவியாய் அம்மாவாய் - உம்
பாசமொழிகளால் இசைக்குயிலாய்
உணர்வுகளில் உறைந்த - உம்
பாசப் பிணைப்பை நினைந்தே மெழுகானோம்
புன்னகை தவழ்ந்த முகம் - எம்
இதயங்களில் என்றும் பவனிவரும்
அஸ்தமனத்தின் ஒரு மாதத்தில் - எம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை தந்தே
இறை மகிமையில் நிலைபெற இறைஞ்சுகிறோம்.

நாளை (16.05.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொத்தியால் லேன்,
வேம்படி, வல்வெட்டித்துறை.

(31954)(11-32)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# குத்துச் சண்டைப்போட்டி

மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சிக் கழகத்தினால் நடத்தப்படும் வடமாகாண குழுக்களுக்கு இடையிலான குத்துச்சண்டை, பழுதூக்கல் போட்டிகள் எதிர்வரும் 23,24,25-07-2004 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

**விண்ணப்பம் ஏற்கும் இறுதித் திகதி 10-07-2004**

பங்குபற்ற விரும்பும் வீரர்கள் விண்ணப்பப்படிவங்களை குபேரன் *தொலைத்தொடர்பகம்*, பிரதான வீதி, பருத்தித்துறை என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P- 021 226 3077
021 226 3950

(சி-34966)(32-11)

## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி
# அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெற்றோர்களின்/பாதுகாவலரின் பராமரிப்பில் வாழ்ந்து வரும் 2003ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், 2002 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் நன்கொடை வழங்குவதற்கு இச் சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தகைமையைக் கொண்டுள்ள மாணவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, போதிய ஆதாரங்களுடன் தங்கள் விண்ணப்பங்களை 16-06-2004ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ *'செயலாளர், நல்லூர் பிரதேசசபை திருநெல்வேலி'* என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பொ.வைரமுத்து**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி.**
15-05-2004

(சி-34995)(21-11-32)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# கேள்வி அறிவித்தல்

பரமேஸ்வரா ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரி பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையின் இரண்டு மாடிக் கட்டடத்திற்கு மேலதிக சீராக்கல் பணிகளுக்காகக் கேள்விப் பத்திரங்கள் யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப்பத்திரங்கள் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்லைக்கழக உதவிப் பதிவாளர், நிர்வாகம் அவர்களிடமிருந்து 29.05.2004 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 8500/-
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 500/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 12.06.2004 ஆம் திகதிக்கு முன் *தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்கமுடியும்.

கடித உறையின் இடதுபக்க மூலையில் வெளிவாரி பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையின் இரண்டு மாடிக் கட்டட சீரமைப்பு என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
**13.05.2004**

**தபால்பெட்டி இலக்கம் - 57,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-34995) (24-11-32)

# மரண அறிவித்தல்
## இரத்தினவடிவேல் இராமநாதன்
**(இளைப்பாறிய தபால் அலுவலர் - வல்வெட்டித்துறை)**

வல்வெட்டித்துறை, அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான இரத்தினவடிவேல் இராமநாதன் அவர்கள் 09.05.2004 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினவடிவேல் தம்பதிகளின் அன்பு மகனும் ஆறுமுகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ரோகினி அம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், வேலும்மயிலும், செல்லையா, ஸ்ரீரங்கநாதன், தேவாம்பிகை, வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரப்பிரபா, காலஞ்சென்ற வாமகிருஷ்ணன் மற்றும் பிறேம்குமார், ஜீவச்சந்திரன், ராஜசேகரன், காலஞ்சென்ற ஞானசேகரன் மற்றும் பிரேமலோஜினி, உமாசேகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சண்முகசிகாமணி, காலஞ்சென்ற சாந்தினி மற்றும மனோலக்சுமி, வசுந்தரா, ரூபவதனா, தியாகராஜா, ரமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ராஜு, சிவா, ஈஸ்வரன், கீதா காலஞ்சென்ற விநோதா மற்றும் விநோத், விநோதா, ராகவன், ராகுலன், பிரதீபன், விக்கினேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் அஜய், அனிஸ், விதுசன், தனுசன், அஞ்சலி ஆகியோரின் அருமைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு லண்டனிலுள்ள STREATHAM VALE மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

T.P- 0044 208 715 6823
- 0044 7931 389993

(சி-34998)
(11-32)

தகவல்:
திருமதி ரோகினி அம்மா
(மனைவி), மக்கள்

# கடத்தல் புள்ளிக்கு பிணை வழங்கிய விவகாரம்; மேல் நீதிமன்ற நீதிபதியால் இடைநிறுத்தம்

கொழும்பு, மே15

நீதிச்சேவைகள் ஆணைக்குழு, கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கடந்த செவ்வாயன்று சேவையில் இருந்து இடைநிறுத்தியுள்ளது.

போதைப்பொருள் கடத்தியவர்கள் என்று குற்றஞ்சுமத்தப்பட்டிருந்த பெரும்புள்ளிகளுக்குப் பிணை வழங்கியது தொடர்பாகவே நீதிபதி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மேல்நீதிமன்ற நீதிபதி, அசன்க திஸ்ஸ ஏகநாயக்க மே 31 முதல் சேவையில் இருந்து ஓய்வுபெறத்தக்கவாறு ஆவணங்களைக் கையளித்துளளார். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குப் பிணை வழங்கினார் என்ற செய்திக்கு மத்தியில் இவரின் ஆவணக் கையளிப்பு நிகழ்ந்துள்ளது எனத தெரிவிக்கிறார் நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் டீ.டபிள்யு. டீ.சீ.ஜயதிலக.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்பான பலருக்குப் பிணை வழங்கினார் மேல் நீதிமன்ற நீதிபதி என்ற செய்தி கடந்த திங்கட்கிழமை அரச இலத்திரனியல் ஊடகங்களில் வெளியாகியது. இது விடயத்தில் ஒரு கோடி ரூபா கைமாற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது என்கிறார் ஜயதிலக. குறித்த இதே நீதிபதியினால் இவ்வாறு பிணை வழங்கப்பட்டவர்களில் வோட்பிளேஸைச் சேர்ந்த கோடிக்கணக்கில் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட ஒருவரின் மனைவியும் அடங்குகிறார்.

முர்ஷிதா ஷியாம் என்னும் அந்தப் பெண் கணவருடன் சேர்ந்து இத்தொழிலில் ஈடுபட்டிருந்தார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டு, கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். மாளிகாவத்தை மேலதிக நீதிவானால் ஆரம்பத்தில் அவரது பிணை மனு மறுக்கப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்ற நீதிபதி ஏகநாயக்க (வயது55) வெளியிட்டிருந்த பல உத்தரவுகளை அடுத்து அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருந்தன. அவற்றுக்காக நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் அவர் விசாரிக்கப்படுகையில், மார்ச் 15இல் அவர் தனது ஓய்வு விண்ணபத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக நீதிபதிகள் பலரிடம் இருந்தும் சம்பந்தப்பட்ட பிறதரப்புக்களிடமிருந்தும் ஆணைக்குழு முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது. சம்பந்தப்பட்ட நீதிபதி பல வழக்குகளில் முழுமையான தீர்ப்பை வெளியிடுவதில் கால தாமதம் காட்டினார் என அம்முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டிருந்ததாக ஆணைக்குழுச் செயலாளர் கூறுகிறார்.

சுமார் 25 முதல் 35 வரையான இறுதித் தீர்ப்புக்களை எழுத்து வடிவம் இல்லாது ஏகநாயக்க வழங்கியிருப்பது பற்றிய சமாச்சாரம் விசாரணைகளில் இருந்து தற்போது தெரிய வந்துள்ளது. சில தீர்ப்புகள் இரண்டோ அல்லது மூன்றோ பக்கங்களில் மாத்திரம் எழுதப்பட்டுள்ளன. அவை திருப்திகரமானவையாக இல்லை எனத் தெரிவிக்கிறது ஆணைக்குழு.

இவ்விடயம் குறித்து அவரை விசாரித்தபோது காலத்தை இழுத்தடியாமல் வழக்குகளை முடித்து விடுவதற்காகவே தாம் அப்படிச் செய்தார் என அவர் தெரிவித்துள்ளார். பெரும் போதைப்பொருள் புள்ளிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல வழக்குகளில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு நீதிபதியினால் எதிர்ப்புக்கள் இருந்தும் கூட பிணை வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் பெரும்பாலான வழக்குகளில் வெளிநாட்டவர்கள் தொடர்புபடுத்தப்பட்டு, குற்றமிழைத்தவர்களாகக் கருதப்பட்டிருந்தனர். பிணை பெற்றபின்னர் அவர்கள் தம்சொந்த நாடுகளுக்குத் தப்பி ஓடியுள்ளனர். எனப் போதைப்பொருள் தடுப்புப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பாரியளவில் போதைப்பொருள் கடத்திக் குற்றமிழைத்தவர்கள் என்று கருதப்படுபவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளதென்று பொது மக்களால் முறைப்பாடு செய்யப்படுமாயின் போதைப்பொருள் தடுப்புப் பொலீஸ் பிரிவு, சட்டமா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கும் என்று அதன் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச வானொலிச் செய்தியின் படி வோர்ட்பிளேஸில் உள்ள போதைப் பொருள் விற்பனையாளரின் மனைவியைப் பிணையில் விடுவிப்பதற்காக சம்பந்தப்பட்ட நீதிபதி 25லட்சம் ரூபா லஞ்சம் பெற்றுள்ளார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளார்.

2001 இல் வேறு ஒரு வழக்கில் 11கிலோ ஹெரோயினுடன் கைதான சந்தேகநபருக்கு விசாரணை இன்றியே பிணை வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போது அந்தச் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். அதே சந்தேகநபர் இந்தியாவில் வாழ்ந்து கொண்டு பாக்கு நீரிணை வழியாக ஆதாயம் தரும் போதைப் பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்டு வருகிறார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளார்.

அபின் மற்றும் அபாய போதைப் பொருள் சட்டத்தின் கீழ் ஒருவர் இரு கிராம் ஹெரோயின் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதானால் குற்றம் நிரூபிக்கப்படும்போது அவருக்கு மரண தண்டனை விதிக்க முடியும்.

ஏகநாயக்கவின் சேவையை மேலும் நீடிப்பதில்லை எனத் தீர்மானிக்க வேண்டுமாயின் அரச வானொலியில் வெளியிடப்பட்ட செய்தியினை அலட்சியப்படுத்தக்கூடாது என்று பிரதம நீதியரசரும் ஆணைக்குழு அங்கத்தவர்களும் நேற்றுமுன்தினம் சுட்டிக்காட்டினார்.

சம்பந்தப்பட்ட நீதிபதி தொடர்பாக விரைவில் விசாரணை ஆரம்பிக்கப்படும் என்றும் -

அவர் அண்மைக் காலத்தில் கொழும்பு மேல் நீதிமன்றத்திலும், நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்திலும் வழங்கிய பிணை உத்தரவுகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்றும் -

நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் தெரிவித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி ஏகநாயகவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அடுத்து மேல் நீதிமன்ற நீதிபதிகள் அமைப்பு நேற்றுக் கூடியது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான எஸ்.சிறிஸ்கந்தராஜா, சரத அம்பேபிட்டிய, எரிக் பஸ்நாயக்க, ஏ.டபிள்யூ. ஏ.சலாம் ஆகியோர் அடங்கிய குழு மேலதிக நடவடிக்கைகளுககாக அரச வானொலிச் செய்தியின் முழு விவரத்தையும் கோரியுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தமது 61வயதுவரை பணியாற்ற முடியும் என்பது பொதுவான நடைமுறை. எனினும், 55வயதின் பின் ஓய்வு பெறுவதற்காக அவர் விண்ணப்பிக்க முடியும். (எ-க)

## கனேடிய நாடாளுமன்றத் தேர்தலில் முதல் தடவையாக ஈழத் தமிழர் போட்டி

ரொரண்றோ,மே15

கனேடிய நாடாளுமன்றத் தேர்தலில் முதல் தடவையாக ஈழத் தமிழர் ஒருவர் போட்டியிடவுள்ளார். எதிர்வரும் ஜூன் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அதைவிட விரைவில் தேர்தல் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி சார்பில் ரொரண்றோ பெரும்பாகத்தின் டோன்வலி மேற்கில் இருந்து போட்டியிட டேவிட் தோமஸ் என்ற ஈழத் தமிழர் தெரிவாகியுள்ளார்.

ஏப்ரல் 20ஆம் திகதி, புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜாக் லெய்ற்றன் உட்பட, கட்சியின் பல முக்கியபிரமுகர்கள் கலந்துகொண்ட முன்மொழிதற் கூட்டத்தில் ஈழத்தமிழர் டேவிட்தோமஸ், சீன இனத்தவரான திருமதி வலரி ஆகியோர் இம்முறை தேர்தலில் போட்டியிடத் தெரிவானார்கள். இவர்களில் வலரி டொன்வலி கிழக்கிற்கும் டேவிற் தோமஸ் டொன்வலி மேற்கிற்கும் தெரிவாகினார்கள்.

தற்போது ஆளும் கட்சியாக இருக்கும் லிபரல் கட்சியின் தலைவர் போல் மார்ட்டின் மீதுகடுமையான புகார்கள் எழுந்துள்ள நிலையில், எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஆதரவு சற்று அதிகரித்துள்ளது. இருந்தாலும் புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறிய அகதிகள் குறித்த விடயத்தில் இந்தக் கன்சர்வேட்டிவ் கட்சி மிகவும் மோசமான எதிர்ப்பையே காட்டிவருகிறது.

அண்மையில் கன்சர்வேட்டிவ் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகள் கோரமான பயங்கரவாதிகள், அவர்களை நிரந்தமாகத் தடை செய்வதுடன், கனடாவிலும்



வடஅமெரிக்கா முழுவதிலும் அவர்களது அரசியல் செயற்பாடுகளையும் தடுத்து முடக்கிவிடவேண்டுமென்று அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. நாடாளுமன்றத்திலும் விதிகளை மிகவும் கடுமையாக்க ஆளும் கட்சிக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது இந்தக் கட்சி.

தற்செயலாக கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் கனடாவிற்குக் குடிபெயர்ந்துள்ள அகதிகள்குறித்த விடயத்தில் மிகக் கடுமையான விதிகளை நடைமுறைப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. புலம்பெயர்ந்து கனடாவில் வாழும மக்களுக்குப் புதிய ஜனநாயகக் கட்சியின் (என்.டி.பி.) கொள்கைகள் மிகவும் சார்பாக அமைந்துள்ளன என்று கருதப்படுகிறது. (எ)

## வலி.தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரம் வீடுகள் நிறுவுவதற்கு ஏற்பாடு

வலி.தெற்கு,மே15

உலக வங்கியின் நிதி உதவியுடன் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சொந்தமாக காணிகள் இருந்தும் நிரந்தர வீடுகளின்றி வாழும் குடும்பங்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு தகுதியான குடும்பங்களைத் தகுதி அடிப்படையில் தெரிவுசெய்யும் பணியில் கிராமசேவையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கிராமசேவையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்திற்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத தகுதியுடைய குடும்பங்கள் தத்தம் கிராமசேவையாளர்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளைச் செய்துகொள்ளலாம். (எ-152)

### முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,மே15

சில்லாலை புனித கதிரைமாதா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமதி பியாற்றிஸ் பற்றிக் இம்மானுவேல் தலைமையில் கதிரை மாதா ஆலய முன்றிலில் நடைபெறும். இந்த விழாவில் பிரதம விருந்தினராக சில்லாலை றோ.க.த.க. பாடசாலை அதிபர் திருமதி க. கனகரட்ணம் கலந்துகொள்வார். (எ-185)

### இளைஞனைக் காணவில்லையென முறைப்பாடு!

யாழ்ப்பாணம்,மே15

இளைஞன் ஒருவனைக் காணவிலலை என்று தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கடந்த புதன் கிழமை அவரது தாயார் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த நவரத்தினம் கிருஷாந்தன் (வயது 17) என்ற இளைஞனே காணாமற் போனவராவார்.

இதுதொடர்பாக அச்சுவேலி பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-7)

### பேராதனை பல்கலை. மாணவர்கள் தாக்குதலில் காயம்!

கண்டி,மே15

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் [illegible] நேற்று முன தினம் பொதுமக்களால் தாக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். கடந்த செவ்வாயன்று ஆரம்பமான மோதல் சம்பவங்களை அடுத்தே இத தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் குடி போதையிலிருந்த ஆட்டோ சாரதிகளுக்கும், மாணவர்களுக்குமிடையே கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற கைகலப்பு பெரும் மோதலாக வெடித்து ஆட்டோ சாரதிகளுக்கு ஆதரவாகப் பொதுமக்கள் சிலர் களத்திற்கு வந்து மாணவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் 500இற்கும் மேற்பட்ட பொலீஸார் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

மேல் பேராதனை, தங்கொல்ல போன்ற இடங்களில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் மீதே நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது. கடந்த புதன் கிழமை இரவு இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர். இச் சம்பவங்கள் மேலும் தொடராமல் தடுப்பதற்காக நேற்றுமுன்தினம் முதல் - கண்டி பிராந்திய பொலீஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் பேராதனையின் முக்கிய பாதைகளில் வீதித் தடைகள் போடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

## வாசகர் திருமுகம்

### மாணவர் நடத்தையில் மாற்றம் வேண்டும்

'ஆசிரியர்களாகத் திருந்தாவிட்டால்' என்று 04.05.2004 உதயனில் வந்த வாசகர் திருமுகம் தொடர்பாக சிலவற்றை முன்வைக்க விரும்புகின்றேன்.

எழுதியவரும் ஒரு மாணவர் என்பதால் அதிகம் விளக்கமளிக்கத் தேவையில்லை என்று நினைக்கின்றேன். இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் கல்வியில் பின்தள்ளிக்கொண்டு செல்லும் ஒரு மாவட்டமாக மாறியுள்ளது. இதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதற்குக் காரணம் தனியார் கல்வி நிறுவனங்கள் மட்டுமல்ல, ஒரு மாணவன் அதிகமான தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்வதுதான் காரணம் என நான் நினைக்கிறேன். ஒரு கல்வி நிலையத்தில் 1+2=3 என்று கற்பித்தால் மறு கல்வி நிலையத்தில் 1+2=3 என்றுதானே கற்பிக்கிறார்கள்... ஏன்தம்பி அரைத்த மாவை திருப்பித் திருப்பி அரைக்கிறீர்கள். ஓர் இடத்தில் படிப்பதை மீட்டுப் படித்தால் பெறுபேறு தானாக உயரும்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்களில் திறமையாக கற்பிக்கிறார்கள் என்று குறிப்பிட்டீர்.... பாடசாலையில் கணிப்பீடு வேலைகள் செய்ய அதிகநேரம் பயன்படுத்தப்படுவதால் பாடசாலைகளில் சிறப்பாக கற்பிக்க முடியவில்லை என நான் நினைக்கின்றேன்.

அடுத்து ஆசிரியர்கள் பாடசாலை முடிவடைய முன் Day Class எடுக்க தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றார்கள் எனக் குறிப்பிட்டிருந்தீர். யாழ். பிரபல பாடசாலைகளில் இருந்து பாடசாலை முடிவடையுமுன் மாணவர்கள் வீடு செல்வது நீர் அறியவில்லையா?

முடிவாகக் கூறுகின்றேன் தனியார் கல்வி நிறுவனத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களை நாம்தான் புகழ் பூத்தவர்களாகக் காட்டுகின்றோம். ஏனெனில், நாம் அவர்களிடம் படிக்கச் செல்லாவிட்டால் அவர்கள் யாரிற்குப் படிப்பிப்பது? திருந்தவேண்டியது ஆசிரியர்கள் அல்ல மாணவர்களே......

இ.சிவகுமார்.

*யாழ்ப்பாணம்*

### மாலு சந்தி என்பது பிழையா?

மாலு சந்தியை மாலி சந்தி என்றார் கனகசபை ராஜ்மோகன். இல்லை இல்லை. மாலைசநதை மருவியதால் மாலு சந்தி ஆகிவிட்டது என்று கவலைப்படுகிறார் அல்வாய் சந்தைக் கணபதி. சொற்கள் மருவுவதும் சிதைவதும் மொழி ஆரம்பமாகிய காலம் தொட்டே வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. இதையாவரும் அறிவார்கள். ஆனால், மாலு சந்தி விவகாரம் சற்று வேறுபட்டது.

குறிப்பிட்ட அந்த சந்தியிலே மாலைப்பொழுதிலே சந்தை கூடியதாக சந்தை கணபதி சான்று பகிர்கிறார். அது மரக்கறி சந்தையா மீன் சந்தையா என்று ஆராய்ந்து பார்த்தால் கடற்கரைக்கு அண்மையில் இருப்பதாலும் மாலை வேளைகளில் மரக்கறிச் சந்தைக்கு வாய்ப்புக் குறைவாக உள்ளதாலும் இது நிச்சயமாக மீன் (மாலு) சந்தையாகத்தான் இருக்கவேண்டும் என்று நான் கருதுகின்றேன். மீன், சந்தியிலே விற்பனை செய்யப்பட்டதால் மாலு சந்தி என்று அழைக்கப்படுகிறது.

மாலு என்ற சிங்களச்சொல் யாழ். குடாநாட்டில் உச்சரிக்கப்படுவதா? என்ற துவேசத்தின் வெளிப்பாடே ராஜ்மோகன், சந்தைக் கணபதி ஆகியோரின் கடிதங்கள் என்று எண்ணுகின்றேன். நான் இவர்களிடம் கேட்கின்றேன், மாலு சந்தியின் அயலூரான கொற்றாவத்தை, இலக்கணவத்தை மற்றும் சுதுமலை என்னும் ஊரின் பெயர்களில் சிங்களச் சொல் எப்படி வந்தது, இதற்கு என்ன வியாக்கியானம் கூறப்போகிறீர்கள்? ஆதிகாலம் முதல் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாகவும் அடர்த்தியாகவும் வாழ்ந்து வரும் யாழ். குடாநாட்டின் ஊர் பெயருக்குள் சிங்களச் சொல் எப்படிப் புகுந்தது என்பதற்கு வரலாற்று ஆய்வாளர்கள்தான் பதில் கூறவேண்டும்.

*சுன்னாகம்.*

எஸ். கண்ணன்

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டத்துக்கு கோட்டக்கல்வி அதிகாரி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக்கல்வி) ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள கோரப்பட்டுள்ளன. தீவக வலயத்துககுள் பணியாற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களும் இலங்கை அதிபர் சேவை தரம் - 1, தரம் 2-1ஐச் சேர்ந்தவாகளும் இப்பதவிகளுக்கு விணணப்பிக்கலாம். எதிர்வரும 18ஆம் திகதிக்கு முன்னர் தீவகக் கல்வி வலயத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(10)

# 'மானுடத்தை நேசித்த மகான்' நாட்டுக்கூத்து இன்று

குருநகர்,மே15

கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத் தமிழ் மன்றத்தினரால இன்று மாலை 6 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் 'மானுடத்தை நேசித்த மகான்' எனும் நாட்டுக்கூத்து நடத்தப்படவுள்ளது.

பல வருடங்களுக்கு முன்னர் எல்சல்வடோரில் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கத்தோலிக்க மத ஆயர் றொமேய்றோ ஆண்டகையின் வரலாற்றை வெளிப்படுத்தும் நாட்டுக்கூத்தே இதுவாகும் என கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத் தமிழ் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (10-51)


மீண்டும் பழைய இடத்தில்...!

## சிறி மாதவன்

எமது ஸ்தாபனம் மீண்டும் இல. 97 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்குகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(31959) – உரிமையாளர்.



## மக்கள் வங்கி அறிவித்தல்

### அடகு சேவை - சுன்னாகம்

வாடிக்கையாளரின் தேவையை உணர்ந்து எமது சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையிலும் சனிக்கிழமைதோறும் அடகுசேவையை விஸ்தரிகக உள்ளோம். இதன்பொருட்டு இன்று (15.05.2004) சனிக்கிழமை காலை 9மணியளவில் அடகுச்சேவையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்க இருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"அடகு சேவையின் முன்னோடி மக்கள் வங்கியே"

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி பிரதேச தலைமைக் காரியாலயம்,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(31961)(34-21-13)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
16 – 01 – 1980



ஆண்டவன் அடியில்
15 – 05 – 2000

### கப்டன் வெற்றி

### பசுபதி பிரபாகரன்

திதி: 16-05-2004

பாசத்தின் இருப்பிடமே!
அழகின் திருவுருவமே வீரத்தின் பிறப்பிடமே!
குடும்பத்திற்காகத் தோள் கொடுப்பாய்
என்று இங்கு நாமிருக்க
நாடு காக்கப் புறப்பட்ட நற்றமிழனே!
தாய் நாட்டிற்காக உனது இன்னுயிரை
நாவற்குழி மண்தனிலே ஈந்தனையோ?
ஆண்டு நான்கு ஆனாலும்
ஆறாதையா எங்கள் இதயம்!

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (16-05-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
தவசிகுளம், மிருசுவில். (31646)(42-21-13)

க.பசுபதி (தந்தை)


தமிழீழ விடுதலைப் புலிகளின்
அரசியல் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம்




எழுதிய
அரசியல், தத்துவம் சார்ந்த
கட்டுரைகளின் தொகுப்பு

## 'விடுதலை'

## வெளியீட்டு விழா

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்
காலம்: 16.05.2004 ஞாயிறு மாலை 3.30 மணி (C/34967)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர்

## யோவான் சின்னத்தம்பி

(இளைப்பாறிய பிரதம சமையலாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

உதிப்பு
22-09-1941

உதிர்வு
15-04-2004

வையத்தினுள் வந்துதித்து – எம்
இதயங்களில் இடம் தந்து
நற் தலைவனாய் அப்பாவாய் – உம்
பாசமொழிகளால் இசைக் குயிலாய்
உணர்வுகளில் உறைந்த – உம்
பாசப்பிணைப்பை நினைந்தே மெழுகானோம்
புன்னகை தவழ்ந்த முகம் – எம்
இதயங்களில் என்றும் பவனி வரும்
அஸ்தமனத்தின் ஒரு திங்களில் – எம்
கண்ணீர்ப் பூக்களை காணிக்கை தந்தே
இறைவன் காலடியில் நிலைபெற இறைஞ்சுகிறோம்.

தற்காலிக முகவரி:
4 ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

நிரந்தர முகவரி:
கச்சார்வெளி,
பளை.

- குடும்பத்தினர்.

(C-34986)(34-21-13)

# புலிகளின் இடைக்கால நிர்வாக வரைபு ஒரு தனிநாட்டுக்கான அடிப்படை நகல்

## அமெரிக்காவில் கதிர்காமர் தெரிவிப்பு

வாஷிங்ரன்,மே15

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக அதிகார சபை ஒரு தனிநாட்டுக்கான அடிப்படை நகல் வரைபு (BLUE PRINT). அதனை ஏற்றுக்கொள்வது இறைமையுள்ள அரசாங்கத்திற்கு பிரச்சினைக்குரியதாக இருக்கும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமர். உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள அவர் அங்கு நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

வாஷிங்ரனில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல், பிரதிஅமைச்சர் ரிச்சட் ஆர்மிடேச் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். நேற்றுமுன்தினம் ஆர்மிடேச்சைச் சந்தித்த கதிர்காமர், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு தற்போது முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகள் பற்றி எடுத்துவிளக்கினார். சந்திப்பின் பின்னர் கருத்துவெளியிட்ட ஆர்மிடேச், அரசின் சமாதான முயற்சிகளைப் பாராட்டினார்.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் பிரஸல்ஸ் நகரில் நடக்க உள்ளது. அதில் உதவிகள் குறித்து அமெரிக்காவின் பங்களிப்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறார் என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டுமெனில் அவர்கள் தமது தீவிரவாதத்தை முற்றாகக் கைவிடவேண்டும் என்றும் கூறினார். சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற சர்வதேச சமூகத்தின் உதவி அவசியம் என்றார் கதிர்காமர். அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலை நேற்றுச் சந்தித்துப் பேசினார் கதிர்காமர்.


வாஷிங்ரன் டிசியில் உள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் அவர் புதன்கிழமை உரையாற்றினார். அப்போதே விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகார சபை, தனி நாட்டுக்கான நகல் வரைபு என்று குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

2003 ஏப்ரலில் பேச்சுக்கள் முறிந்த போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், நேரம் வீணாகியது என்று கூறினார். சமாதான முயற்சிகளால் வடக்கு - கிழக்கு எந்த நன்மையையும் பெறவில்லை என்றார். புனர்வாழ்வு அபிவிருத்தியும் மக்களைச் சென்றடையவில்லை என்றார். எந்த ஆட்சியாளர்களினாலும் தமது மக்கள் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வது கடினம். இரு தசாப்தங்களாக போரால் சிதைந்து போன வடக்கு - கிழக்கை மீளமைக்க சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெறுவதற்கு நாம் உழைப்போம். வடக்கு - கிழக்கில் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல இடைக்கால நிர்வாக சபையை ஒரு சாதனமாக விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

ஆனால், இந்த இடைக்கால நிர்வாக அதிகாரசபையை இறைமையுள்ள அரசினால் ஏற்றுக்கொள்வது கடினம். அதில் நாடாளுமன்றம் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. தனியாகக் கணக்காய்வாளர் நாயகம் தேவை என்று கேட்கிறது; இலங்கையின் மூன்றில் இரண்டு பங்கு கடல் பிரதேசத்தில் 200 மைல் பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வற்புறுத்துகிறது. இதுதொடர்பாகப் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முடியும் என்று நம்புகின்றோம்.

சமாதானப் பேச்சை எப்போது ஆரம்பிக்கின்றோம் என்பது முக்கியமில்லை. அந்த முயற்சிகளை எவ்வாறு பேணி முன்னெடுக்கப் போகின்றோம் என்பதுதான் சவால் என்றார்.(க)





**மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தின் தேசிய பாதுகாப்பிற்கும், நிலையான தீர்வுக்குமான உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்டப் பிரிவினரால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறையின்போது எடுக்கப்பட்ட படங்கள்.**

**நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் மனித உரிமை ஆணைக் குழுவின் செயற்றிட்ட இணைப்பாளர் சேனக திஸாநாயக்கா கருத்துரை வழங்குவதையும் இங்கு காணலாம்.**

# தென்மராட்சியில் 3 பாடசாலைகளில் எழுத்தறிவூட்டல் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,மே15

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளில் எழுத்தறிவூட்டல் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

'யுனிசெவ்' நிறுவனத்தினால் இப்பயிற்சி நெறிகள் யாழ். மாவட்டத்தில் 15 பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறி முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே மூன்று பாடசாலைகளில் ஏப்ரல் மாதம் தொடக்கம் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-L17)

# அரசின் சமாதான முன்னெடுப்புகள் நம்பகத்தன்மை வாய்ந்தவை அல்ல!

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,மே15

அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகள் எந்தவகையிலும் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக அமையவில்லை. அவர்கள் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களும் பாரிய பின்னடைவை ஏற்படுத்துவனவாகவே உள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:- அமெரிக்காவில் கிடைக்கப் பெற்ற புடைவைக் கோட்டாவை இந்த அரசு கைவிடும் நிலையில் செயற்பட்டு வருகிறது.

இதனால், சுமார் 11 லட்சம் பேர் தொழில் வாய்ப்புகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று கூறிக்கொண்டு வந்தவர்கள் இன்று நாட்டைச் சீரழிக்கும் நிலைக்கு இட்டுச் செல்கின்றனர். நாட்டில் போதிய அளவு நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. அதை வெளியில் கொண்டுவராமல் வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய முற்படுகின்றார்கள். வெளிநாட்டு இறக்குமதியை நிறுத்தி உள்நாட்டில் உற்பத்தி செய்வோம் என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்றவுடனேயே அரிசி இறக்குமதி செய்ய அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர்.

நிலையில்லாத கொள்கையுடன் செயற்பட்டவர்கள் எப்படி நாட்டைக் கட்டியெழுப்பப்போகின்றனர்?

இவர்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் நம்பகத்தன்மை அற்றதாகவே உள்ளது என அவர் கூறினார். இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவும் கலந்துகொண்டார். (எ-க)

# சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின

குருநகர்,மே15

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மற்றும் வைத்திய நிறுவனங்கள் ஆகியவற்றில் கடமைபுரியும் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், எழுதுநர்கள் மற்றும் அதனுடன் இணைந்த தர உத்தியோகத்தர்களுக்கான முதலாம் கட்ட சேவைக் காலப் பயிற்சி வகுப்புகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது.

நேற்றுமுன்தினம் காலை 9மணி தொடக்கம் மாலை 5மணிவரை நடைபெற்ற முதலாம் நாள் செயலமர்வில் 'தலைமைத்துவம்' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜாவும், 'பொது முகாமைத்துவம்' எனும் தலைப்பில் நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் செ.மனோகரனும், 'அலுவலக நடைமுறைகளும் கடிதத் தொடர்புகளும் கோவைகள் பராமரித்தலும்' எனும் தலைப்பில் யாழ். செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளையும் 'கணனி முறையில் தரவு நிரற்படுத்தலும், கணனி பிரயோகமும் பராமரிப்பும்' எனும் தலைப்பில் யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவன விரிவுரையாளர் வி.சிவகுமாரும் விரிவுரைகளை நிகழ்த்தினார்கள்.

இம்முதலாம் கட்டச் சேவைக் காலப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 17ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும் எனவும் சுமார் 35 உத்தியோகத்தர்கள் இதில் பங்குபற்றுகிறார்கள் எனவும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் மேலதிகப் பிரதிப் பணிப்பாளரும் இணைப்பாளருமான க.தனரஞ்சிதராஜன் தெரிவித்தார். (10-51)

# வடக்கு – கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களை ஒருங்கிணைக்க ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு,மே15

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் பல தரப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளை ஒன்றிணைத்துச் சீர்படுத்தும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

இவ்வாறான நிறுவனங்களை நிவாரண, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஊடாக ஒரே குடையின் கீழ் கொண்டுவருவதற்கு அவர் முடிவு செய்திருக்கிறார்.

இந்த நடைமுறை புனர்வாழ்வுப் பணிகளை செயற்றிறன் மிக்கதாக மாற்றுவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடியதாகவும் அமையும் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

இதற்கு முன்னர் பல தரப்பட்ட அரச நிறுவனங்கள் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்ததனால் செயற்றிட்டத்தைச் சரியாக நடைமுறைப் படுத்தவில்லை.

இதன் காரணமாக வடக்கு - கிழக்குக்கு ஒதுக்கப்பட்ட பணம், வீண் விரயமானதுடன் முறைகேடாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிவாரண, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தரான எம்.எஸ்.ஜயசிங்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேலும் சமாதான நல்லிணக்க நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக சமாதானப் பேரவையும் நிறுவப்பட இருக்கிறது. இதற்கு ஜனாதிபதி தலைமை தாங்குவார்.

சமாதான நடைமுறைகளில் பங்களிக்கக்கூடிய அனைத்துத் தரப்பினதும் பங்களிப்புடன் சமாதானம் தொடர்பான கொள்கைகளை வகுத்து, ஒருங்கிணைக்கும் பொறுப்பு இந்த அமைப்பைச் சாரும்.

சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றுக்கான தேசியப் பேரவையின் இரு பிரதான பிரிவுகளில் ஒன்றாகவே நிவாரண, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அமைகிறது. சமாதானச் செயலகம் அதன் மற்றைய இரண்டாவது பிரிவாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்பான சகல விடயங்கள், புலிகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள், வடக்கு - கிழக்கில் வாழும் ஏனைய தமிழ், முஸ்லிம் அமைப்புக்களுடனான தொடர்புகள் மற்றும் இராணுவம், பொலீஸாருடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் ஆகியவற்றைச் சமாதானச் செயலகம் ஒருங்கிணைக்கும்.

அத்தோடு, சமாதானத்தைப் பேணுதல், சட்டம் ஒழுங்கை வடக்கு - கிழக்கில் கடைப்பிடித்தல் என்பனவற்றையும் சமாதானச் செயலகம் மேற்பார்வை செய்யும்.

இலங்கை கண்காணிப்புக் குழுவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உறவைக் கட்டியெழுப்புவதிலும் சமாதானச் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.(எ-க)

## விரைவில் மின்விநியோகம்

வலி.தெற்கு,மே15

புன்னாலைக்கட்டுவன் வடக்கு மத்தாலோடைக் கிராமத்துக்கு விரைவில் மின்சாரம் வழங்க மின்சார சபையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப வேலையாக மின்சாரக் கம்புங்கள் நடப்பட்டு வருகின்றன.

மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டு முடிவடைந்தவுடன் மின்சாரக் கம்பிகள் இணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்து விரைவில் மின்சாரத்தை வழங்குவதற்குரிய பணிகள் நடைபெற்று வருகின்றன. (10-152)

# அடிப்படை மனித உரிமை மீறல் குறித்து சங்கரி உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு,மே15

யாழ். மாவட்டத்தில் பொதுத் தேர்தல் நீதியாக நடைபெறவில்லை என்று அறிவிக்கக்கோரி யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு முதன்மை வேட்பாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான வீ.ஆனந்த சங்கரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

தனது அடிப்படை மனித உரிமைகளான பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் ஆகியவை மீறப்பட்டன என்று தெரிவித்து ஒரு கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி ஆனந்தசங்கரி அந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த மனுவில் யாழ். அரச அதிபர், தேர்தல் ஆணையாளர், இராணுவத்தளபதி ஆகியோரும் மற்றும் சிலரும் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான தனது அறிவுறுத்தலையும் மீறி கட்சியின் பொதுச் செயலாளர் ஆர்.சம்பந்தன் விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலை இறுதிப்படுத்திக் கொண்டார் என்றும் - தம்மைப் புறந்தள்ளி விட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டனர் என்றும் - ஆனந்தசங்கரி தனது மனுவில் தெரிவித்திருக்கிறார்.

இதனால் தான் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டார் என்றும் - குறிப்பிட்டிருக்கிறார்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்பே தனக்கும் தனது சுயேச்சைக் குழு வேட்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் விடுதலைப் புலிகளிடம் இருந்து கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன என்றும் - தாமோ, தமது வேட்பாளர்களோ, ஆதரவாளர்களோ அரசியல் நடவடிக்கையில் ஈடுபடாதவாறு தடுக்கப்பட்டனர் என்றும் - மனுவில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-க)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

500-தொடர் இலக்கமுடைய Yamaha Newsmate YCL 5 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.அமலன், 18/2, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (31949)

தரமான Prima Broiler குஞ்சுகள், Prima பேட்டுக்குஞ்சுகள் 17.05.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். Suddi Farm வட்டுக்கோட்டை, பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: க.தனபால சிங்கம் ( நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முதிரைச் சந்தையடி, நல்லூர். (31729)

11ஸ்ரீ தொடரிலக்கம் கொண்ட Toyota Corella 50 ரக ஜப்பான் கார் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 021-226-3575. (31919)

பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.:2867, 3529. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31811)

கறுப்பு, வெள்ளை நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அசோக்குமார், கிறிஸ்தவ தேவாலயம் முன்பாக, அராலி வடக்கு, அராலி. (31966)

கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.35/1, இந்துக் கல்லூரி லேன், யாழ்ப்பாணம். (31969)

### தவறிவிட்டது

அளவெட்டி வடக்கு, அளவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குணபூபதி என்பவருடைய தே.அ. அட்டை (இல.433300238V), விசேட அ.அட்டை என்பன இணுவில் சந்திக்கும் கே.கே. எஸ். வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈரன் பீடா வெற்றிலைக்கடை, இணுவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (31968)

### வாடகைக்கு

இலுப்பையடிச் சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் இரண்டு பெரிய கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: 024-222 4285, 071-224 5966. (31958)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1964 இல் பிறந்த, 7இல செவ்வாய் 60 கிரக பாவமுள்ள, அரச உத்தியோகம் பார்க்கும் M.A. பட்டதாரியான மணமகளுக்குப் பொருத்தமான டாக்டர், பொறியியலாளர், கணக்காளர், ஆசிரியர், தனியார் நிறுவன உரிமையாளர் போன்ற தகுதிவாய்ந்த 40-43 வயதுள்ள மணமகன் தேவை. சாதகம் மற்றும் முழு விவரத்துடன் தொடர்புகொள்க. விளம்பர இல: 2262, மே/பா, உதயன். (31884)

### மணமக்கள் தேவை

வெளிநாட்டு மணமக்களுக்கும் உள்ளூர் உத்தியோகத்திலுள்ள மணமகன்களுக்கும் சொந்த, வர்த்தக உரிமையாளர்களுக்கும் (மணமகள்கள்) மணமக்கள் தேவை. வெளிநாட்டிலுள்ள மணமக்கள் உள்ளவர்களும் தொடர்புகொள்ளவும். பரந்தாமன் - ராசாத்தி, அபிராமி திருமண சேவை, ஆடியபாதம் சந்தை வீதி, முதலாம் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (31965)

## சோதனைச் சாவடி அகற்றப்பட்டது

குருநகர்,மே15

யாழ். வேம்படி வீதியில் இரண்டாம் குறுக்குவீதிச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவச் சோதனைச் சாவடி அண்மையில் அகற்றப்பட்டுள்ளது. முதலாம் குறுக்கு வீதியில் மட்டும காவலரண் அகற்றப்படாது தொடர்ந்து உள்ளது. (10-51)

### விற்பனைக்கு

* Amstrde E Mailer (Model EM U.K.) ரெலிபோன் (புதியது)
* Yamaba ETS 600/ETS 900 Made In Japan ஜெனரேட்டர்
* 50சதுரஅடி பெல்ஜியம் காப்பற்
* Lumala சைக்கிள் (ஆண்கள்)

தொடர்பு: S.சேவியா, 21, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (31916)

---

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 20.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணி.
இடம்: பாடசாலை மண்டபம்.
தலைவர்: அருட்செல்வி G.செல்வராணி A.C. (அதிபர்)

பெற்றோர் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-34992)(42-34-13-19) - செயலாளர்.

---

## புதுக் கடைத் திறப்பு விழா

வடமராட்சி மக்களின் நன்மை கருதி "பஜாஜ்" மோட்டார் சைக்கிள்களை தங்கள் பிரதேசத்திலேயே கொள்வனவுசெய்ய வசதியாக எமது கிளை நிறுவனமொன்றை 16.05.2004 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.02 மணிதொடக்கம் 12 மணி வரையான சுபவேளையில்

**இலக்கம் 1,2, கொடிகாமம் வீதி, நெல்லியடியில்**

ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அத்தருணம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்றைய தினம் கொள்வனவுசெய்யும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள்களுக்கும் ரூபா 2000/= விலைக்கழிவுடன் இரண்டு கெல்மெட்டுக்களும் ஒரு ஜக்கெட்டும் இலவசமாக வழங்கப்படும்.

1) பல்சர் 180 (DSTI)
2) பல்சர் 150 (DSTI)
3) கலிபர் 115 (டிஸ்க் பிறேக்)
4) கலிபர் 115
5) பொக்சர் டிலுக்ஸ்
6) பொக்சர் ஏ.ஆர்.
7) பீ.வை.கே.

ஓட்டோ வகைகளையும் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

**குறிஞ்சி ரேடேர்ஸ்**

| | | |
|---|---|---|
| இல.75. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். | இல.6. நவீன சந்தை. சாவகச்சேரி. | இல.1.2. கொடிகாமம் வீதி. நெல்லியடி. கரவெட்டி. |

(31972)(34-13-19-37)

---

## கைதடி வாசிக்கு அபராதம் விதிப்பு

தென்மராட்சி,மே15

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுப் பயன்படுத்திய கைதடி வாசிக்கு சாவகச்சேரி நீதிவான் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். கைதடியைச் சேர்ந்த வேலன் இராஜேந்திரன் என்பவருக்கே அபராதம் விதிக்கப்பட்டது. (எ-117)

---

## திருமணப் பொன்விழா

15-05-2004



அல்வாய் தெற்கு – கெளி கோட்டத்தைச் சேர்ந்த

**வீரசிங்கம் – தெய்வநாயகி**

தம்பதியினர் இன்று (15-05-2004) தமது 50ஆவது திருமண ஆண்டு நிறைவினை தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்கள்.

சகல சம்பத்துக்களும் பெற்ற இவர்கள் தொடர்ந்தும் பல்லாண்டு காலம் இனிதே வாழவேண்டுமென எல்லாம்வல்ல ஆலடி ஐங்கரனின் அருள்வேண்டி அன்புடன் வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துபவர்கள்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-34965)(34-26-13-19)

---

## இல்லற வாழ்வில் இனிதே இணைந்து பொன்விழாக் காணும்

## திரு.திருமதி சிங்காரவேலு சரஸ்வதி



சிவன்கோயிலடி, புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்துவருபவரும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவருமான

**உயர்திரு. சுப்பிரமணியம் சிங்காரவேலு**

(ஓய்வுபெற்ற வைத்தியசாலைச் செயலாளர்)

அவர்களும்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்துவருபவருமான

**திருமதி சரஸ்வதி சிங்காரவேலு**

அவர்களும்

இல்லற வாழ்வில் இணைந்து பொன்விழாக் காணுவதை
லண்டன் வாழ் பிள்ளைகள்: விஜயசிங்கம், விஜயகுமார், யசோதா, கீதா,
மருமக்கள்: சத்தியநாதன், சாந்தகுமார், ரோகிணி, இந்துமதி,
பேரப்பிள்ளைகள்:சசீவன், மகிஷணன், டனீஸணன், சிந்துஜா, அனித்தா, தாரணி மற்றும் கோபாலகிருஸ்ணன் குடும்பம் (கொக்குவில்), தளையசிங்கம் குடும்பம் (லண்டன்), சற்குணராசா குடும்பம் (லண்டன்), பரதகுமாரன் குடும்பம் (கனடா), இந்திரகுமார் குடும்பம் (கனடா) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

அனைவரும் பொன்விழா தம்பதியினரை சகல செல்வமும் சிறப்புறப் பெற்று செழிப்புற வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
கோபாலகிருஸ்ணன் குடும்பம்.
பொற்பதி வீதி,
கொக்குவில்.

(31957)(12-34-13-19)

## தேர்தல் காலத்தில் சிங்கள தேசியம் பேசியவர்களுக்கு

# ஆட்சியில் அமர்ந்த பின்னர்தான் அரசியல் களநிலை புரிகின்றது

**போர்**நிறுத்த ஒப்பந்தம், 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கையெழுத்தான சமயத்தில் எதிர்க்கட்சிகளுக்கு அதில் ஏதுவித கருத்துப் பரிமாறலுக்கும் இடந்தரப்பட்டிருக்கவில்லை. அது மட்டுமல்ல நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் அதில் சம்பந்தம் இருக்கவில்லை. ஆனால், ஆட்சி அதிகாரத்தின் மிக முக்கிய பங்காளியாக தொடர்ந்து ஜனாதிபதி இருந்து வந்தார். இருந்த போதும் போர்நிறுத்த ஒப்பந்தம் அவருக்குத் தெரியாமலே செய்து கொள்ளப்பட்டது என்ற வாதம நீடிக்கவே செய்தது.

இது சரியான நிலைப்பாடோ இலலையோ ஐ.தே.கட்சி அரசு இதற்கான பெரும் இழப்பினை எதிர்கொள்ள நேர்ந்துவிட்டது.

முன்னைய அரசின் இரண்டு வருடகால ஆட்சியின் இறுதிக் காலத்தில் சிங்கள தேசியத்தின் தீவிரவாதத் தன்மையை அது மிக மோசமான விதத்தில் எதிர்கொள்ள நேர்ந்தது. இன்றைய அரசின் முக்கிய பிரமுகர்கள் இதில் பிரதான பாத்திரங்களை வகித்தார்கள். சிங்கள பேரினவாதக்கட்சிகளான ஜே.வி.பியும் சிஹல உறுமயவும் அமைதி முயற்சிகளுக்கு எதிரான ஊர்வலங்களையும், பேரணிகளையும் நடத்தினார்கள். குறிப்பாக சமாதான முயற்சியின் அனுசரணையாளர்களுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டங்கள் பெருமளவில் அமைந்திருந்தன.

அதேவேளை, அமைதிமுயற்சிககு எதிரான கருத்துக்களை ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் வெளியிடாமல் இருக்கவில்லை. இவர்களில் சிலர் ஜே.வி.பி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் கலந்து கொண்டார்கள்.

ஐ.தே.கட்சி அரசினால் முன்னெடுக்கப்பட்டு வந்த அமைதி முயற்சியானது நாட்டுக்கு மிகக் கேடுவிளைவிக்கும் ஒன்றாகவே இருக்கப் போகிறது என்ற அபிப்பிராயம் தேர்தல் காலகட்டத்தில் சிங்கள வாக்காளர் மனங்களில் உறுதியாகப் பதியப்பட்டிருந்தது. இதனால் ஊக்கம் பெற்ற ஜே.வி.பியினர் தாம் பதவிக்கு வந்தால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முற்று முழுதாகக் கிழித்தெறிவதாகவும், தேவையானால் மாற்றி அமைப்பதாகவும் வாக்குறுதிகளை அள்ளிவீசினார்கள். நோர்வே அனுசரணையாளர்களை வெளியேற்றுவதாக அறிவித்தது மட்டுமின்றி அவர்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருப்பதாகக் கூறி அவர்களின் கொடும் பாவிகளையும் எரித்தார்கள்.

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் தாங்களே என்று புலிகள் கூறுவதை எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் அனைவருமே குறை கூறினார்கள். அமைதிப்பேச்சுக்களில் முஸ்லிம்கள் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்வில்லை யென்றும் குறைப்பட்டார்கள்.

புலிகளின் இடைக்கால தன்னாட்சி கோரிக்கை தனிநாடுக்கான முன்வரைவு என்று கூறியும் எதிர்த்தார்கள்.

**வெற்றியும்தோல்வியும்**

இந்த நாட்டு அரசியல் தலைவர்கள், பொதுமக்களின் நலன்களை அடகு வைத்துத் தங்களின் அரசியல் அதிகார ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் நிலையிலிருந்து ஒரு போதுமே மீளமாட்டார்களா என்ற கேள்வியே இப்பொழுது எழுகின்றது.

அமைதி முயற்சியின் வெற்றியும் தோல்வியும் இந்தத்தலைவர்கள் அதனை எந்த அளவு பெருந்தன்மையுடன் அணுகுகிறார்கள் என்பதைப் பொறுத்தே இருக்கும்.

தேர்தலுக்குப் பின்னர் அமைதி முயற்சியில் புதிய அரசு காட்டும் ஆர்வம் எதிர்பார்க்காத ஒன்று என்றாலும் பெரிதும் வரவேற்கப்படுகின்றது.

அமைதி முயற்சியை மேற்கொணடவர்களையும், அது மேற்கொள்ளப் பட்டமுறையையும் கண்டித்த அதே அரசியல் தலைவர்கள் தான் அதனை முன்னெடுக்க இன்று முன்னிற்கிறார்கள அதுவும் அதே பழைய முறையில்.

அன்று இவர்களிடம் வாங்கிக் கட்டிக்கொண்டு பதவியிலிருந்த இன்றைய எதிர்க்கட்சியினர் மக்களுக்கு இப்பொழுது அதனை எடுத்துக காட்டுகிறார்கள்.

அன்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் ஜே.வி.பியிலும் இருந்து கொண்டு அமைதி முயற்சியைக் கண்டித்தவர்கள் அமைதியடைந்து விட்டார்கள்.

அதேவேளை அமைதி முயற்சி முழுவீச்சில் நடைபெறுகின்றது. பலவாறும் குறைகூறப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க புதிய அரசு உறுதி பூண்டுள்ளது. அதனை ரத்துசெய்வது அல்லது மாற்றி அமைப்பது என்ற கதையெல்லாம் மறைந்து போனது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளின் இடைக்கால தன்னாட்சிக்கான யோசனைகளை அடிப்படையாக வைத்து அமைதிப் பேச்சை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறார். ஆனால், இறுதித்தீர்வின் முக்கிய அம்சமாகவே இடைக்கால தன்னாட்சி விடயம் முடிவெடுக்கப்படவேண்டும் என்கிறார் அவர்.

**மூன்று முக்கிய அம்சங்கள்**

தேர்தல் காலத்தில் பேசிய பேச்செல்லாவற்றையும் மறந்துவிட்டு இன்று ஜனாதிபதி குமாரதுங்க, புலிகளை தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளவும் அவர்களுடன் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் ஆயத்தமாகிறார். இந்த நிலைமைக்கு மூன்று நடைமுறைக் காரணங்கள் இருக்கின்றன.

தேர்தலில் வெற்றிபெற்று பதவியில் அமர்ந்துவிட்டாலும் தொடர்ந்து



பதவியிலிருப்பதானால் நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து செயற்படவேண்டும் என்பதே முதலாவது காரணமாகும்.

எதிர்க்கட்சியிலிருந்த போது அன்றைய அரசு புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கடுமையாகக் கண்டித்தவர்கள் இன்று ஆட்சியில் அமர்ந்ததும் யதார்த்தமான கள நிலைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கில் பெரும் பிரதேசத்தைப் புலிகள் தம்வசம் வைத்திருக்கிறார்கள் என்பதும் ஒரு விடயம்

இரண்டாவது காரணம் யாதெனில், 2002ஆம் ஆண்டு ஜுனில் டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிதி ஆதாரங்களைப் பெற்றுக கொள்ளவேண்டிய அவசியம் இருக்கின்றது. ஜப்பான் தலைமையில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் 4.5 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அமைதி முயற்சிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே இந்த உதவிகள் விடுவிக்கப்படும் என்ற நிபநதனையும் அதில் விதிக்கப்பட்டிருந்தது. இந்த உதவிகளில் சில ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தாலும் பெருந்தொகையான நிதி ஆதாரங்கள விடுவிக்கப்படாமலே இருந்து வருகின்றது.

புதிய அரசாங்கம் பல பொருளாதாரத் திட்டங்களில் அக்கறை கொண்டிருப்பதால் வெளிநாட்டு நிதி ஆதாரங்களை இதற்குப் பயன்படுத்திக் கொள்ள ஆர்வம் கொள்வது ஆச்சரியமில்லை. எனவே அமைதி முயற்சியை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில் இந்த வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வது சாத்தியமாகப்படவில்லை.

மூன்றாவது விடயம் என்ன வென்றால், நாடாளுமன்றத்தில் அதற்குள்ள எணணிக்கைப் பின்னடைவு. சபாநாயகர் தேர்தலில் அரசுக்கு ஏற்பட்ட தோல்வி இதைத் துலாம்பரமாக்கியது. அபபொழுது தான் இது ஒரு சிறுபானமை அரசு என்பது அவர்களால் உணரப்பட்டது. அரசு ஏதாகிலும் தீர்மானதை அல்லது சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் சில கட்சிகள் அதனுடன் கூட்டணியாகவேண்டும் அல்லது ஆதரித்து வாக்களிக்க வேண்டும் அதுவுமில்லையானால் வாக்களிப்பின் கலந்துகொள்ளாமல் நடுநிலைவகிக்கவேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. உதாரணத்துக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வாக்களிப்பில் கலந்துகொள்ளாமலிருக்குமானால் நாடாளுமன்றத்தில் அரசுக்கு பெரும்பான்மை கிடைக்கும், அமைதிச் செயற்பாடுகளின் முன்னேற்றமும் விடுதலைப் புலிகளைத் திருத்திப்படுத்தவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து வாக்களிப்பதைத் தவிர்க்க உதவலாம்.

**அரசாங்கத்தின் மனமாற்றம்**

அமைதிப் பேச்சுக்களை ஆரம்பத்தில் அரசும் விடுதலைப் புலிகளும ஆவலாய் இருக்கிறார்கள் என்று நோர்வே அனுசரணையாளர்கள் தெரிவிததுள்ளனர். ஆனால் விடுதலைப் புலிகள 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆந திகதி முன்னைய அரசிடம் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான முன்வரைபின் மீதே பேசசுக்கள் ஆரம்பமாகவேண்டும் என வற்புறுத்தியுள்ளார்கள். இந்த யோசனைகள் அகன்ற சுயாட்சிக்கு வழிகோலுகின்றன. உண்மையில் இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்ட சில தினங்களில் இன்றைய வெளியுறவு அமைச்சர் அன்று எதிர்க்கட்சி யிலிருந்தவர் விரிவான வகையில் எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தவர். அது எதிர்காலத்தில் இறைமையுள்ள தனிநாட்டுக்கான சட்டபூர்வ அங்கீகாரமாகிவிடும் என்று அவர் கூறியிருந்தார்.

ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள மனமாற்றமானது புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பையும் உள்ளடக்கியதாகவே இருக்கும் என்று கருத இடமுண்டு. முன்னைய அரசு விட்ட இடத்திலிருந்து பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயார் என்று அரசு கூறியிருப்பதையும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைக்கபடும் விடயத்தின் அடிப்படையிலேயே பேசசுக்கள அரம்பமாக வேண்டுமென்று புலிகள் கூறுவதையும் கவனிக்கும் போது எதிர்வரும் பேச்சுக்கள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை முதன்மைப்படுத்தியே அமையும் என்று கருதமுடியும்.

ஆனால் அரசாங்கத்தில் இணைந்துள்ள கட்சிகளின் இந்தவிதமான அடிப்படை கொள்கை மாற்றத்தை சிங்களச் சமூகம் எப்படி ஏற்றுக்கொள்ளப் போகின்றது என்பதே இன்று தோன்றியுள்ள ஒரு கேள்வி. அமைதி முயற்சிக்கும், நோர்வே அனுசரணைக்கும் எதிரான உணர்வுகளை தூண்டிவிட்டதன் காரணமாக இந்தக் கட்சிக்கு வாக்களித்த மக்கள் தமக்குத் துரோகம் இழைக்கப்பட்டு விட்டதாக கருத இடமுண்டு.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் முன்னைய அரசு விட்ட தவறுகளிலிருந்து இன்றைய ஆட்சியாளர்

**ஜெகான் பெரேரா**

கள் படிக்கவேண்டிய விடயங்கள் நிறைய உண்டு இதில் மிக முக்கியமான விடயம் என்னவென்றால் எதிர்கட்சியினரையும் பங்காளிகளாக இணைத்துக் கொள்வதாகும். அவ்வாறாயின் எதிர்க்கட்சியினரை திருத்திப்படுத்தும் வகையில் அரசு தனது கொள்கைத் திட்டங்கள் சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உதாரணத்துக்கு சொல்வதானால், எதிர்க்கட்சிகளின் சம்மத மில்லாமல் அரசியல் திட்ட மாற்றங்கள் சிலவற்றை அவசரமாகச் செய்து முடிக்க ஜனாதிபதி துடித்துக் கொண் டிருக்கும் நிலைப்பாட்டைக் குறிப்பிடலாம்.

முன்னைய அரசின் அமைதி முயற்சிகளில் எதிர்க்கட்சியினர் ஒதுக்கப்படாமல் இருந்தால் இன்று அதன் நிலை வேறாக இருந்திருக்கும். ஆனால், ஜனாதிபதியின் எதிர்வு கூறமுடியாத அன்றைய நிலையில் அவர் அமைதி முயற்சியைக் கெடுத்து விடுவாரோ என்ற பயம் இருக்கவே செய்தது.

இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் எல்லாத்தரப்புகளுமே கடந்த காலத்தில் ஏற்பட்டுவிட்ட தவறுகளிலிருந்து பலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

**தமிழில்:நந்தன்**

---

# மீண்டும் பாடசாலைகள் மூலம் இலவசச் சீருடைகள் விநியோகம்

## அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

வலி. தெற்கு,மே15

கடந்த இரு வருடங்களாக பிரதேச செயலகங்கள் கிராம சேவையாளர்களூடாக வழங்கி வந்த பாடசாலை மாணவர் களுக்கான இலவச சீருடை விநியோகத்தை மீண்டும் பாடசாலைகளூடாக வழங்க கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் ஆரம்பமான காலத்தில் அவை பாடசாலை அதிபர், ஆசிரியர்களூடாகவே வழங்கப்பட்டு வந்தன.

பாடசாலைகளுக்கூடாக சீருடை விநியோகிக்கப்பட்டதில் சில முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கூறி அவற்றை பிரதேச செயலகங்களூடாக வழங்க கல்வி அமைச்சு முன்னர் நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கமைய பிரதேச செயலகங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களூடாக சீருடை விநியோகம் நடைபெற்று வந்தது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களூடாக சீருடை வழங்கப்பட்ட போது அநேகமான மாணவர்கள் சீருடைகளைப் பெறுவதில் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்ததுடன், பலருக் குச் சீருடைகள் கிடைக்கமுடியாமலும் போய்விட்டமை கண்டறியப்பட்டது.

இந்த நடைமுறையிலும் பல்வேறு சிக்கல்கள் தோன்றியதால் பழைய படி பாடசாலை அதிபர்கள் மூலம் சீருடையை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை அங்கீகரித்துள்ள தைத் தொடர்ந்து இவ்வாண்டுக்கான சீருடைகள் பாடசாலை அதி பர்கள் மூலம் வழங் கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(எ-152)

# நால்வருக்கு 23 ஆயிரம் ரூபா அபராதம்

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்த நான்கு பேருக்கு யாழ்.நீதிமன்றம் 23 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

ஆனைக் கோட்டையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை அன்ரனி தாஸ், ஆடியபாதம் வீதி, கொக்கு விலைச் சேர்ந்த நடராசா பாஸ்கரன், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த கணேசபிள்ளை குகேந்திரன் ஆகிய மூவரையும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும்-

கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த சின்னையா நாகராசா என்பவரை 5 ஆயிரம் ரூபா தணடப்பணமும், 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறும் யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார். (எ-5-ரி)

---

# “சீர் இணுவைத் திருவூர்” நூல்வெளியீட்டு விழா

## இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம்,மே15

இணுவில் சைவத்திருநெறிக் கழக அறநெறிப்பாடசாலையின் ஏழாம் ஆண்டு நிறைவையொட்டி “சீர் இணுவைத் திருவூர்” என்ற இணுவில் கிராம




வரலாற்று நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவகாமி அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவத்திருநெறிக்கழகத் தலைவர் கெ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் செஞ்சொற் செலவர் ஆறு. திருமுருகன் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

ஆசியுரைகளை இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள், தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்சுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவர்.

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராஜா வாழ்த்துரை வழங்குவார். நூலின் பன்முகப் பரிமாணங்கள் பற்றி பேராசிரியர் சபா. ஜெயராசா உரையாற்றுவார். வெளியீட்டுரையினை கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும், ஆய்வுரைகளை கலாநிதி செ.திருநாவுக்கரசு, கலாநிதி மனோன்மணி,சண்முகதாஸ் ஆகியோரும் நிகழ்த்துவர். நூலின் தொகுப்பாசிரியர் மூ.சிவலிங்கம் பதிலுரை வழங்குவார்.

(எ-4)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய நபருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், மே15

லைசென்ஸ் மற்றும் மணலை ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி திருட்டுத்தனமாக மணல் ஏற்றிவந்த நபருக்கு யாழ்.நீதிமன்றினால் 10ஆயிரத்து 500ரூபா அபராதம விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று யாழ்ப்பாண பொலீஸாரினால் யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டார். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த துரைராசா கணேசலிங்கம் என்பவரே இவ்வாறு ஆஜர் செய்யப்பட்டவராவார்.

மணலைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்த நீதிவான், மணலை இருபாலை கானான் சிறுவர் இல்லத்தின் கட்டடத் தேவைகளுக்காக ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

மணல் ஏற்றிவந்த லொறியை யாழ்.பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரியின் பாதுகாப்பில் வைக்குமாறும் நீதிவான் தமது தீர்ப்பில் தெரிவித்தார். (எ-ரி)

# யாழ்.பல்கலையில் வீடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலை திரைப்படவட்டம் வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் "குளோட் ஷப்ரோல்" இயககிய பிரெஞ்சுத் திரைப்படமான "இறைச்சிக்கடைக்காரன்" (LE BOUCHER) என்ற திரைப்படம் இன்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராஜா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. (எ)

## NOTIFICATION
### ST.JOHN'S COLLEGE, JAFFNA
### OLD BOYS ASSOCIATION
### ANNUAL GENERAL MEETING

The 89th Annual General Meeting of the Old Boys' Association is scheduled to be held on the 12th of June 2004 (Saturday) at 8.30 a.m. in the College Auditorium.

Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or before 5th of June 2004.

The programme for the day shall be published in due course.

No individual invitations would be sent.

Breakfast (30/-) and Lunch (100/-) Tickets are available from the treasurer **Mr.T.Nanthakumaran.**

Life members are kindly requested to contact the Treasurer, the Secretary or the College Office with their membership card in view to build - up a new membership register.

**C.Pathmanathan** President.  **A.Navaneethakrishnan** Secretary.

(31967)(13-34-19)

## STUDY IN UK

**Meet the Consultant for higher education at the following universities**

- University of Dundee - UK
- Leeds Metropolitan University - UK
- Queens Park College – London - UK
- Trinity & All Saints College –Leeds - UK
(Accredited by the Leeds University)

**ADMISSIONS AVAILABLE FOR SEPTEMBER 2004**

INTERVIEWS AT : Uthayan Publications Auditorium, 361, Kasthuriar Road, Jaffna.

Date and time: Monday 17th May 2004, 10.00 am to 5.00pm

**Undergraduate courses in:**
Forensic Anthropology, Business, Computing, Engineering (Electronic, Civil, Mechanical, Computer), Life Sciences, Law, Art, Design & Architecture

**Postgraduate courses in:**
International Business, Engineering, Law, Life Sciences, MBA etc

Students should bring qualification transcripts and letters of reference if possible
(art, design and architecture also require portfolio of art-work)

✦ **Partial scholarships available** ✦

**For Information: 0777 715987** (24-19-13) (சி-34994)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21 - 12 - 1943



உதிர்வு
15 - 05 - 1994

**அந்தோனிப்பிள்ளை இம்மனுவல் ஜெயசிங்கம்**

(மதுவரி அத்தியட்சகர்)

"உங்கள் சீவியத்தில் நேசித்தது போல
மரணத்திலும் மறவோம்"

**மனைவி, உறவினர்கள், நண்பர்கள்.**

கரவெட்டி. (31974) (21-19-13)

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
### வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்
### (நிக்கொட்)
### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### "ஆஅவ" கடன் இல.1846 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல் 28
# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (நிக்கொட்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD திட்ட கேள்விச்சபைத் தலைவர் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | MN/NECORD/WS/03 | மன்னார் எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திட்ட புனர் நிர்மாணம் | M4 | 219,000/- |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD உடன் M- 7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருக்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றினைச் சமர்ப்பிக்கவேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. ஊழல் மற்றும் மோசடி காரணமாகவும் அல்லது திருப்தியற்ற வேலை செய்ததினால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு நிகொட் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை மூன்றாகும்.

05. திருகோணமலையில் 140, மின்சார நிலைய வீதியிலமைந்துள்ள நிகொட் திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் விருப்பமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி சம்பந்தமான மேலதிக தகவல்களையும், இதற்குரிய ஆவணங்களையும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (தொலைபேசி 026-2227434. தொலைநகரி 026 - 222 7401
மின்னஞ்சல் necord@sltnet.lk)

06. கேள்வி ஆவணங்களை 2004 மே 17 இல் இருந்து 2004 மே 31வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை அலுவலக நாள்களில் மேற்படி அலுவலகத்தில், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/- செலுத்தி கொள்வனவு செய்யலாம்.

07. விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வியிடுவோரின் முன் தகைமைக்கு அவசியமான ஆவணங்களையும் இரு வேறு கடித உறைக்குள் வைத்து மூடிய பின் அரக்கு முத்திரையிட்டு இதில் 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் குறித்த திகதியில் குறித்த நேரத்திற்குள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

08. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறி வைத்த கேள்விகள் *தலைவர், கேள்விச்சபை,* ***NECORD,*** *140 மின்சார நிலைய வீதி, திருகோணமலை* என்ற முகவரிக்கு 2004 ஆனி 4 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பிவைக்கப்படவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பிரசன்னமாகவிருக்கலாம்.

09. ஒப்பந்தகாரர்களுக்கு கேள்வி கோருவதற்கான போதிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று திருகோணமலை திட்டக்காரியாலய கலந்துரையாடல் மண்டபத்தில் 2004 மே 28 பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

**திரு.த.லங்காநேசன்,**
**கேள்விச்சபை தலைவர்,**
NECORD, **140, மின்சார நிலைய வீதி,**
**திருகோணமலை.**

(சி-34989)
(21-19-13)

# சோனியா பிரதமராக இன்று தெரிவாவார்

சென்னை,மே15

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிரடி திருப்பமாக காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. வாக்கு எண்ணிக்கை நடந்த 539 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி 217 இடங்களைப் பிடித்தது. இதில் காங்கிரஸுக்கு 145 இடங்கள் கிடைத்தது. பா.ஜனதா கூட்டணிக்கு 186 இடங்கள் மட்டுமே கிடைத்தது. இதில் பாரதீய ஜனதாவுக்கு 138 இடங்கள் கிடைத்தது.

இடதுசாரிக் கட்சிகளான இ.கம்யூனிஸ்ட் 43 இடங்களையும், வ.கம்யூனிஸ்ட் 10 இடங்களையும், ஆர்.எஸ்.பி. 3 இடங்களையும், அகில இந்திய பார்வர்டு பிளாக் 3 இடங்களையும் பிடித்தது. மற்ற கட்சிகள் 78 இடங்களைப் பிடித்தன.

தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து பாரதீய ஜனதா கட்சி, எதிர்க்கட்சி வரிசையில் உட்கார முடிவுசெய்துள்ளது. மத்திய மந்திரிசபைக் கூட்டத்துக்குப் பிறகு வாஜ்பாய் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்துத் தனது ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்தார்.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து மத்தியில் ஆட்சி அமைக்கும் ஏற்பாடுகளில் காங்கிரஸ் தீவிரமாக இறங்கியுள்ளது. காங்கிரஸ் காரிய கமிட்டி நேற்றுமாலை அவசரமாக கூடி சோனியா தலைமையில் மதசார்பற்ற கூட்டணி அரசு அமைக்கவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

காங்கிரஸ் காரியசபை மீண்டும் இன்று கூடி புதிய அரசு அமைக்க மதசார்பற்ற கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதுபற்றி ஆலோசிக்கப்படுகிறது. அந்தக் கட்சிகளுடன் பேசி முடிவு எடுக்கும் அதிகாரத்தை சோனியாவுக்கு காரிய சபை வழங்குகிறது.

இந்த நிலையில் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு (புதிய காங்கிரஸ் எம்.பிக்கள்) கூட்டம் இன்று (சனிக்கிழமை) நடைபெறும் என்று காங்கிரஸ் கட்சியின் அரசியல் செயலாளர் அகமது பட்டேல் தெரிவித்துள்ளார். இந்த எம்.பிக்கள் கூட்டத்தில் நாடாளுமன்றக் காங்கிரஸ் தலைவராக (பிரதமர்) சோனியாகாந்தி தேர்வு செய்யப்படுகிறார்.

இதையடுத்து, மதசார்பற்ற கட்சித் தலைவர்களுடன் சோனியா புதிய ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் பேச்சு நடத்துகிறார். பிரதமர் பதவி ஏற்பதில் அந்தக் கட்சிகளின் முழு ஒத்துழைப்பும் கேட்டுப்பெறுகிறார்.

இதையடுத்து ஜனாதிபதி அப்துல கலாமைச் சந்தித்து கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க உரிமை கோருகிறார். (8)



தேர்தல் வெற்றிக்குப் பின்னர் படப்பிடிப்பாளர்களுக்கு 'போஸ்' கொடுக்கும் சோனியா.

# நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி மத்திய அரசுக்கு எதிரான மக்களின் கருத்து

## அது மாநில அரசுக்கு எதிரான தீர்ப்பு அல்ல என்கிறார் ஜெயலலிதா

சென்னை,மே15

நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி மத்திய அரசுக்கு எதிரான மக்களின் கருத்துக் கணிப்பே தவிர அது மாநில அரசுக்கு எதிரான மக்கள் தீர்ப்பு அல்ல.

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா. நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழகத்தின் 39 தொகுதியிலும் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி படுதோல்வியடைந்தது. இதனையடுத்து ஜெயலலிதா இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று தி.மு.க. தலைவர்கள் கருத்துத்தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் அளித்திருக்கும் தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் தேர்தல், மத்தியில் யார் ஆளவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தல். புதிய அரசை மத்தியில் நிறுவுவதற்காக நடத்தப்பட்ட தேர்தலதான் இது. புதிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களை தேர்நதெடுப்பதுதான் இந்தத் தேர்தலின் நோக்கம்.

அதன்படி, மக்கள் தங்கள் கருத்தைத் தங்களின் வாக்குகளமூலம தெரிவித்து இருக்கிறார்கள். அதன் மூலம் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இது நாடாளுமன்றத் தேர்தல்தானே தவிர மாநில அரசைப்பற்றிய மக்களின் கருத்தை அறிவதற்கு நடத்தப்பட்ட தேர்தல் இல்லை.

இதுதான் உண்மை. இதுதான் அரசியல் பாலபாடம். ஆனால், இந்த நாடாளுமன்றத் தேர்தல் தீர்ப்பை ஏதோ அ.தி.மு.க அரசுக்கு எதிரான தீர்ப்பு என்பது போலக் கருதிச் சிலர் பேசுவது வேடிக்கையானது. தி.மு.க தலைவர் கருணாநிதி, 'தமிழக அரசின் எதேச்சதிகாரத்துக்கு எதிராக மக்கள் வாக்களித்து இருக்கிறாகள்' என்று சொல்கிறார். ஜி.வாசனும், மு.க.ஸ்டாலினும் அரசுக்கு எதிரான மக்களின் கருத்து என்றும் எனது அரசு ராஜினாமாச்செய்ய வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

1989 ஆம்ஆண்டு தி.மு.க. அரசு ஆட்சி நடத்தியது. அப்போது அ.தி.மு.க எதிர்க்கட்சியாக இருந்தது. அப்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளில் 39 இடங்களைக் கைப்பற்றியது. அவ்வாறு அனைத்து இடங்களிலும் தி.மு.க. படுதோல்வி அடைந்த போதும் கருணாநிதி ராஜினாமாச் செய்யவில்லை.

1998 இல் தி.மு.க. ஆட்சியில் இருந்தது. கருணாநிதிதான் முதல்வராக இருந்தார். அப்போது நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி 30 இடங்களைப் பிடித்தது. தி.மு.க. கூட்டணி 10 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. இந்தத் தீர்ப்பையும் அரசுக்கு எதிரான மக்கள் தீர்ப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்கவேண்டும், சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் தமிழக மக்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றனர். இந்த வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டு எனது அரசு ராஜினாமாச் செய்யவேண்டும் என்று சொல்வது வேடிக்கையானது.

கடுமையான வரட்சி தமிழகத்தை வாட்டியபோதும், தி.மு.க. ஆட்சியின் காரணமாக தமிழகத்தின் கஜானா காலியாக்கப்பட்ட நிலையில் நிதி நிலை மிகச் சீர்கேடான நிலையில் இருந்தபோதும் மக்கள் நலத்தை கருத்தில் கொண்டு திட்டங்களை வகுத்தும் உதவிகளை வழங்கியும் அரசு பணியாற்றி வருகிறது. இந்தப் பணி எந்தத்தொய்வும் இன்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நன்மைபுரியும். எமது தலைமையிலான அ.தி.மு.க. அரசு எப்போதும் அதற்கு முன்நிற்கும் என்பதை உறுதிபடத் தெரிவிக்கின்றேன்.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு வாக்களித்த மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார். (எ-5)




# காங்கிரஸ் ஆட்சி அமைப்பது உறுதி

இந்திய அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதும் வகையில் சோனியா தலைமையில் காங்கிரஸ் ஆட்சி மலர்ந்துள்ளது.

அரசியல் வானில் தென்றல் போல வந்த சோனியா புயல் வேகப் பிரசாரத்தால் அதிக இடங்களைக் கைப்பற்றி தன் சாதுரியத்தை நிரூபித்துள்ளார். அவரது அயராத பிரசாரம் காரணமாக காங்கிரஸ் கட்சி 145 இடங்களைக் கைப்பற்றியது.

அவர் தலைமையிலான கூட்டணிக்கு மொத்தம் 217 இடங்கள் கிடைத்துள்ளது.

பாரதீய ஜனதா கூட்டணி 186 இடங்களுடன் ஒதுங்கி விட்ட நிலையில் மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்பை பெற்றுள்ளது. நாடாளுமன்றத்தில் 272 எம்.பிக்கள் ஆதரவு இருந்தால்தான் ஆட்சி அமைக்கமுடியும்.

காங்கிரஸ் கூட்டணி தன்னிடம் உள்ள 217 எம்.பிக்களுடன் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை நாடி உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 62 எம்.பிக்கள் கிடைத்துள்ளனர்.

காங்கிரஸ் கூட்டணி - கம்னிஸ்ட்டுக்களின் மொத்த பலம் 279 ஆகும். எனவே, கம்யூனிஸ்ட்கள் ஆதரவுடன் மத்தியில் கூட்டணி மந்திரிசபை அமைவது உறுதியாகிவிட்டது. (8)

# ரஜினி உருவ பொம்மை எரிப்பு பொலீஸ் தடியடிப் பிரயோகம்

ஜயங்கொண்டம்,மே15

ஜயங்கொண்டம் நகரில் பா.ம.க மாவட்டச் செயலாளர் த.திருமாவளவன் தலைமையில் ரஜினி உருவப் பொம்மை வியாழக்கிழமை எரிக்கப்பட்டது.

விருத்தாசலம் சாலையிலுள்ள காமராஜர் சிலையிலிருந்து ரஜினி உருவ பொம்மையை, ஊர்வலமாக எடுத்துச் சென்றனர் பா.ம.கவினர். கடைவீதியில் நான்கு சாலைகள் சந்திப்பில் பொம்மையைத் தீயிட்டு கொளுத்தினர்.

பா.ம.க. வழக்கறிஞர் அணி மாவட்டச் செயலாளர் ஜெயராமன், நகரச் செயலாளர் ரெங்கநாதன், துரை, ராமதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இவர்களில் ஒருபிரிவினர், அங்கு தையல் கடையில் ரஜினி படத்துடன் இருந்த பெயர்ப்பலகையை உடைத்து எறிந்தனர்.

இதனால், பரபரப்பு ஏற்பட்டது. சமபவ இடத்திற்கு வந்த பொலீஸார் தடியடி நடத்தி விரட்டினர். இப்பகுதியில் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸார் கலவரத்தில் ஈடுபட்டிருந்த பா.ம.க. நகரச் செயலாளர் சு.துரை, துணைச்செயலாளர் மணிவண்ணன், மேல்குடியிருப்பைச் சேர்ந்த வீரமணி, ரவி, கொம்போடு செல்வராஜ் ஆகியோரைக் கைது செய்தனர்.

மேலும் மாவட்டச் செயலாளர் த.திருமாவளவன், வழக்கறிஞர் பிரிவு மாவட்டச் செயலாளர் ஜெயராமன் உட்பட பலரைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (8)

# புதிய இந்திய அரசுடனும் பேச்சைத் தொடர பாக். தயார்

இஸ்லாமாபாத்,மே15

காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் புதிய இந்திய அரசுடன் பேசத் தயார் என்று பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது.

வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஆட்சியை இழப்பது குறித்து பாகிஸ்தான் அரசு வட்டாரங்களில் வியப்பு ஏற்பட்டிருக்கிறது. வாஜ்பாய் வெற்றி பெறுவார்; சமரசப் பேச்சுக்கள் உத்வேகம் பெறும் என்று அவை நம்பியிருந்தன.

"இந்தியாவுடன் சமாதானத்தைப் பேணவும் ஒத்துழைக்கவும் பாகிஸ்தான் ஆர்வமாக இருக்கிறது. தெற்காசியாவில் சமாதானத்தை ஏற்படுத்தவும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு வலுவூட்டவும் இந்தியாவுடன் தொடர்ந்து பேச ஆர்வமாக இருக்கிறோம். புதிய அரசு பதவியேற்ற பிறகு ஆட்சியாளர்களுடன் தொடர்பு கொள்ளத் தயாராக இருக்கிறோம்".

- என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் இஸ்லாமாபாத்தில் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கிறது.

இதற்கிடையே -

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் எப்படி நடக்கிறது; வாக்கு எண்ணுவதை எப்படி மக்கள் நேரடியாகத் தெரிந்து கொள்ளமுடிகிறது; அரசு தொலைக்காட்சியிலும் தனியார் தொலைக் காட்சிகளிலும் எப்படி முடிவுகள் விவாதிக்கப்படுகின்றன என்று நேரில்காண வசதியாக தன் வீட்டுக்கே பாகிஸ்தான் அரசின் உயர் அதிகாரிகள், ராஜீயத்துறை அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரை அழைத்தா இந்தியத்தூதர் சிவ்சங்கர் மேனன். வியாழக்கிழமை அவர்கள் அவர் வீட்டில் தொலைக்காட்சியில் இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசித்தனர்.

வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் இந்திய - பாகிஸ்தான் உறவு பல ஏற்ற இறக்கங்களைக் கண்டது. 1999 இல் நவாஸ் ஷெரீப் பிரதமராக இருந்தபோது லாகூர் சென்றார் வாஜ்பாய். அதன்பின் கார்கில் மலைப் பகுதியை பாகிஸ்தான் இராணுவம் ஆக்கிரமித்தது. இதனால், அப்பகுதியில் சண்டைநடந்தது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மோசமடைந்தது.

2001 டிசெம்பர் 13 ஆம் திகதி இந்திய நாடாளுமன்றத்தின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதையடுத்து, இந்திய இராணுவம் எல்லைக்கு விரைந்தது. பாகிஸ்தானும் இராணுவத்தைக் குவித்தது. போர் மூளக்கூடிய ஆபத்து ஏற்பட்டு, பிறகு நீங்கியது. இரு நாடுகளும் தூதரக உறவை முறித்துக் கொண்ட தோடல்லாமல் விமானங்கள் பறக்கக் கூடத் தடைவிதித்தன.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் சார்க் நாடுகளின் 12 ஆவது உச்சி மாநாட்டுக்காக இஸ்லாமாபாத் சென்றார் வாஜ்பாய். அங்கு முஷாரப்பும் அவரும் சந்தித்துப் பேசினர். காஷ்மீர் உட்பட அனைத்து விடயங்களையும் பேச இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. இந்தியாவுக்கு எதிராகத் தங்கள் மண்ணைப் பயங்கரவாதிகள் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம்' - என்று முஷாரப் உறுதியளித்தார்.

உறவு சுமுகமானது. மக்களிடையே நேரடித் தொடர்புக்கு வழி செய்யப்பட்டது. பஸ், ரயில், விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பித்தது. உறவைச் சுமுகமாக்க இரு நாடுகளின் வெளியுறவுத்துறை அதிகாரிகளும் அடுத்தமாதம் சந்தித்துப் பேசவேண்டும்.

அதன்பிறகு ஜூலை - ஓகஸ்டில் அமைச்சர்கள் நிலையில் சந்திப்பு நடைபெறவேண்டும். இந்நிலையில், இந்தியாவில் ஆட்சிமாற்றம் ஏற்படுகிறது. எனவே, புதிய அரசுடனும் பேசததயார் என்று பாக்.அரசு அறிவித்துள்ளது. (எ-5)

# "ஆமைக்கும் முயலுக்கும் இடையிலான போட்டி" நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகப் பிரியங்கா

"முயலுக்கும் ஆமைக்கும் இடையேயான போட்டிபோல நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காஙகிரஸ்கட்சி வெற்றிபெற்றுள்ளது" என பிரியங்கா காந்தி வதேரா தெரிவித்துள்ளார்.

சோனியா காந்தி போட்டியிட்ட தொகுதியான ரேபரேலியில் வாக்கு எண்ணும் மையத்தில் தேர்தல் வெற்றி தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பிரியங்கா கூறியதாவது:-

முயல் (தே.ஜ.கூட்டணி) ஆமைக்கு (காங்கிரஸ்) இடையே நடந்த ஓட்டப்பந்தயம் போல தற்போதைய தேர்தல் போட்டி அமைந்தது. அந்தப் போட்டியில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம். வாக்குப்பதிவிற்கு பிந்திய கருத்துக் கணிப்புகள் எல்லாம் மத்தியில் தே.ஜ.கூட்டணி அரசு அமையும் என தெரிவித்தன. ஆனால், காஙகிரஸ்கட்சி பெரும்பான்மையை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது.

"முட்டை பொரிக்கும் முன்னரே குஞ்சுகளை எண்ணவேண்டாம்" என எனது அம்மா கூறுவார். அதுபோல் மத்தியில் காங்கிரஸ் அரசு அமையுமா என தேர்தல் முடிவுகள் முழுமையாக வரும் முன்னரே தெரிவிக்க இயலாது. எந்தப் பதவியைப் பெறவும் நாங்கள் ஆர்வம்காட்டவில்லை. மதசார்புடைய பாரதீய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதே எங்களின் லட்சியம்.

எனது தாயார் நான்கு மாதங்களாக தனிப்பட்ட முறையில் நாடுமுழுவதும பிரசாரம் செய்தார். அதன்மூலம் வெறறிபெற்றுள்ளார். எனது தாயாரை நினைத்துப் பெருமைப்படுகிறேன். தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ராகுல் காந்தி தனது தொகுதி மக்களின் மேம்பாட்டுக்காக தொடர்ந்து பாடுபடுவார். [illegible]றும் அமெதி மற்றும் ரேபரேலி தொகுதி மக்களின் மேம்பாட்டிற்காக பாடுபடுவேன்.

- இவ்வாறு பிரியங்கா காந்தி வதேரா கூறினார். (எ-5)

# அடக்குமுறைக்கும் ஆதிக்கவெறிக்கும் உதாரணமான குமுதினிப் படுகொலை

*குமுதினிப்படுகொலையின் 19 ஆவது நினைவு தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இன்று நெடுந்தீவு மாவலித்துறையில் உள்ள குமுதினிப் படுகொலை நினைவுத் தூபியடியில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. படுகொலையின் துன்பியல் வரலாற்றை நினைவுபடுத்துகின்றது இந்த ஆக்கம்.*

ஆழக்கடலின் ஆதிக்கவெறிக்கு அடங்கிவிடாமல், அழிந்துவிடாமல் கற்பார்கள் காவல் செய்ய, பனை மரமும் பூவரசும் வேறு பல நிழல் தரு விருட்சங்களும் துணையிருக்க நீர் வேலிப்பாதுகாப்பில் என்றும் நிம்மதித் தூக்கமிடும் எம் நெடுந்தீவு நீண்ட கடற்பரப்பின் அப்பால் ஒதுங்கிக் கிடப்பினும் எம்மவரின் சிந்தனைகளும் செயல் வடிவங்களும் ஓங்கி ஒலித்தபடியே என்றும் இருக்கும்.

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி வழமைபோலவே 'குமுதினி' தன் சேவையை தொடர்ந்த போது சிறுவர்கள், தாய்மார், பெரியவர் என மொத்தம் எழுபத்திரண்டு பயணிகள் பயணம் செய்தனர். சுமார் ஒரு மணி நேரம் பயணம் செய்ய வேண்டிய படகு அரைமணிப் பயணத்துடன் இயந்திரம் நிறுத்தப்பட்டதும் பயணிகள் கரை வந்து விட்டதோ என்ற எண்ணத்தில் வெளியே எட்டிப் பார்த்தனர். அவ்வேளை சிறிய படகு ஒன்றில் வந்தவர்கள் குமுதினியில் ஏறிக்கொண்டனர். சோதனையிட வேண்டியுள்ளதால் எல்லோரும் பின் பக்க அறைக்கு (Compartment) செல்லும்படியும் பணித்து, பின்னர் ஒவ்வொருவராக முன்னறைக்கு (1st Compartment) வரவழைக்கப்பட்டு கத்தி, கண்டங்கோடரி, கொட்டன்கள் என்பவற்றால் அடித்தும், வெட்டியும், கொத்திக் குதறியும் சித்திரவதை செய்து சரித்தமையும் கடந்து போனவை.

**கோ.பத்மநாதன்**
**நெடுந்தீவு - 04**

இந்தத் துயரச் சம்பவத்தில் அன்றைய தினமே (15.5.1985) முப்பத்திரண்டுபேர் உயிர் துறந்தனர். ஏழு மாதக் குழந்தை உட்பட நால்வர் மறுநாள் சிகிச்சை பயனளிக்காமல் உயிர் பிரிந்தனர். மொத்தமாக முப்பத்தாறு உயிர்கள் தமிழர் என்ற ஒரே காரணத்தினால் கொடூரம் செய்யப்பட்டு பலியெடுக்கப்பட்டனர். ஏனைய 36 பேரும் நீண்ட காலத்தின் பின்னர் நலம்பெற முடிந்தாலும் பூரணசுகம் பெற்றவர்களாக அவர்களால் மாற முடியவில்லை என்பது மிகப் பெரிய சோகம்.

தமது நாளாந்த கடமைகளின் நிமித்தமும் தேவை நிறைவேற்றல்களுக்குமாக ஆரம்பமான அன்றைய அவர்களின் பயணம் அபரக் கிரியைகளுக்கான அடித்தளம் என யார் தான் எண்ணினர். முறைப்படியான சமூகச் சடங்குகள் நிறைவேற்ற அவகாசம் இல்லாவிட்டாலும் ஊரின் மயானங்கள் ஒரே நாளில் இத்தனை உடல்களை வரவேற்றது அதுதானே முதற்றடவை.

கடமையே கண்ணென வாழ்ந்து காட்டிய ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், எந்தக் குறையும் இன்றி குமுதினியை சேவைக்குட்படுத்திய சிப்பந்திகள், மாணவர்கள், குழந்தைகள், பெரியவர்கள் என யாவருமே கனவுகளை மறந்து கல்லறைப் பூக்களாகினர்.

வெட்டிச் சரிந்தவர்களும், வெறியர்களுடன் சமராடி வீரச் சொர்க்கம் அடைந்தவர்களும், தப்பியவர்களும, தப்பவைத்தவர்களும் எம்மவரின் வீரத்தின் அடையாளங்களே. செல்லரித்துப்போன தேசக் கட்டுமானங்களில் நம்மவரின் இழப்புக்கள் நிலையானவை. இனவாத அரசுகளை ஆட்டங்காண- அடிபணிய வைத்த வரலாற்றுப பரிமாணங்களில் ஒரு முக்கிய திருப்புமுனை. ஈழ வரலாற்றில் ஈரவரிகளால் என்றும் நிலைக்கும் குமுதினிப் படுகொலை.

குமுதினியின் வயது சுமார் இருபதைத் தாண்டியபோதும் அவளூடாய் நாம் பெற்ற இந்த சோகம் 19 வருடங்களைக் கடந்து நிற்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் நாளாந்தம் அந்த வேதனை வளர்ந்துகொண்டே செல்கின்றது. தந்தையை, தாயை, கணவனை, மனைவியை, உடன் பிறப்பை, பிள்ளையை, அயலவரை இழந்துவிட்ட சோகத்தை எந்தப் பரிகாரங்களும் ஈடுசெய்திட முடிந்திடுமா?

# ஒருவன் முழு மனிதனாக உருவாக கலையும், விஞ்ஞானமும் இரு கண்கள்

## மருத்துவபீட கலை விழாவில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம்



யாழ்ப்பாணம்,மே15

ஒருவன் முழுமனிதனாக திகழ்வதற்கு கலையும், விஞ்ஞானமும் இரு கண்கள்.

- இவ்வாறு கடந்த 8 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களினால் நடத்தப்பட்ட கலைவிழாவின் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் மருத்துவ பீடாதிபதியுமான க.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என ஒளவையார் கூறினார். ஒரு கண்ணால் நாம் முழுமையாகப் பார்க்கமுடியாது. இரு கண்களும் கட்டாயம் தேவை. கற்பதற்கு கலை மட்டும் போதாது. விஞ்ஞானம் மட்டும் போதாது. இரண்டும் அமையுமிடத்துத்தான் வளர்ச்சியைக் காணமுடியும். மேம்பாடு நடைபெறும் நாடும் வளரும்.

ஏதோ காரணத்தால் சீனாவில் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், அதைப் பாவித்தது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் அதன்பின் ஆங்கிலேயர். ஆனால், எமது அறிவை நாங்கள் பயன்படுத்தாமல் இருப்பது தான் பெரியதொரு குறைபாடு. எங்களிடம் எல்லாம் இருந்தும் நாங்கள் அதைப் பயன்படுத்துவதற்குப் பின் நிற்கிறோம். சொந்தநலன் கருதியோ அல்லது எந்தக் காரணமாயிருந்தாலும் நாங்கள் எங்களை வளம்படுத்த, மேம்படுத்த முன்வராமல் பின் நிற்கிறோம். இந்தநிலை மாறவேண்டும்.

எண் என்று சொல்லப்படுவது விஞ்ஞானம். விஞ்ஞானம் ஒரு இயற்கையான கட்டமைப்பு என்று சொல்லுகிறோம். கலையோ செயற்கையானது. இங்கே கலைஞர்கள் எத்தனையோ செயற்கைகளை அறிமுகப்படுத்துகின்றார்கள். வாசிக்கப்போகின்றார்கள்.

ஆனால, விஞ்ஞானமோ இயற்கையாக உள்ளது. அதற்கு இரண்டு அடிப்படைத் தேவைகள் இருக்கின்றன. ஒன்று கருவிகள். மற்றது அதை நிரூபித்துக்காட்டும் முறைகள் என்று சொல்லலாம். இந்த இரண்டையும் தான் இயற்கை விஞ்ஞானம் என்று சொல்லுகிறோம். பழைய காலத்தில் சாத்திரக் கணிப்பீடு மூலம் எப்போது அமாவாசை வருகிறது. எப்போது பறுவம் வருகிறது என்று 5000 வருடங்களுக்கு முதலே சொல்லத் தொடங்கி விட்டார்கள். அவ்வளவு முன்னேற்றமடைந்திருந்த நாம் இன்று இவ்வளவு பின்தங்கியிருப்பதற்கு நாங்கள் தொடர்ந்தும் முயற்சி எடுக்காமலிருந்ததுதான் காரணம். மற்றவர்கள் எங்களைக் குறைசொல்வதற்கு இடமளித்தமை இன்னொரு காரணமாக இருக்க முடியும்.

இனி கலாசாரம் என்று சொல்லும் போது கலை, கலாசாரம் எம்மிடையே நிறைய இருக்கின்றது. நீங்கள் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப்பாருங்கள் பாலர் பாடசாலையிலேயே கலை, கலாசாரம் வளர்கின்றது. ஆனால், அதே மாதிரி விஞ்ஞான கலாசாரம் வளருவதை, உயர்வதை, பெருகிக்கொண்டிருப்பதை நாம் கண்ணால் காணமுடியாது. இது ஒரு பெரிய குறையாகவுள்ளது.

மருத்துவ மாணவர்களின் இந்தக் கலைநிகழ்வு செயற்பாடுகளும் ஒரு வெற்றிகரமானதாக அமையும். எமது நாடும் மக்களும் இந்த இரு கலைகளிலும் சிறந்து விளங்குவார்கள். இந்த மாணவர்களும் தமது அயராத முயற்சியின்மூலம் இப்படியான கலைநிகழ்வுகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து சிறப்புரையாற்றிய சிறப்பு விருந்தினர் ஆறு. திருமுருகன் தனது உரையில் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று ஒரு மகிழ்ச்சியான விழாவைக் கொண்டாடுகின்றது. பலதிறமை வாய்ந்த அறிஞர்களையும் பலரது உயிரைக்காப்பாற்றும் மருத்துவர்களையும் உருவாக்கிவிட்டிருக்கிறது இந்த மருத்துவபீடம். இந்தப் பணி இன்னும் தொடர்ந்தவண்ணமுள்ளது. இன்று பல சிரமங்களுக்கு மத்தியில் பல அறிஞர்கள் பணியாற்றுகின்றனர். மாணவர்கள் கற்கின்றனர். இங்கே உள்ள பூரணமாகக் கட்டிமுடிக்கப்படாத நிலையிலுள்ள கேட்போர் கூடத்தை தமது கலைநயத்தால் வடிவமைத்துக் கொடுத்திருக்கும் மாணவர்களின் திறமை, அவர்கள் மருத்துவத்தில் மட்டுமல்ல, கலையிலும் விற்பன்னர்களாக இருக்கிறார்கள் என்பதை விளக்குகின்றது.

யுத்தத்தினால் எத்தனை வீடுகள், கோயில்கள் மற்றும் கட்டடங்கள் இடிந்து மீண்டும் உயிர்பெற்ற போதும் பலரின் உயிரைக்காப்பாற்றும் யாழ்ப்பாண மருத்துவபீடம் இன்னும் இந்த நிலையிலேயே இருக்கின்றது. 21 ஆம் நூற்றாண்டில் நவீன உலகத்தில் நாங்கள் வாழ்நது கொண்டிருந்தாலும் மருத்துவபீடத்தின் இந்தக் குறையை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பது கவலைக்குரியது; வெட்கப்படவேண்டியது. எங்களைக் காப்பாற்றுங்கள் என ஒருவர் கையெடுப்பது கடவுளிடத்திலும் வைத்தியரிடத்திலும்தான்.

ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் வைத்தியத்துறைக்கு வாழ்வு கொடுக்கவேண்டும். அந்த வாழ்வு கொடுக்கும் பணியிலே இருக்கும் பெரியவர்கள் சமூகத்துடனும் இணைந்திருக்கின்றனர். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் மருத்துவபீடத்திலுள்ள குறைபாடுகள் பற்றி சில மாணவர்கள என்னிடம் எடுத்துக் கூறியிருந்தார்கள். அதன்பின் என்னாலான உதவிகளை இந்த மருத்துவபீடத்திற்கு நான் செய்துவருகிறேன். எதிர்காலச்சமூகம் இந்தப் பீடத்துக்கு உதவவேண்டும்.

மருத்துவ பீடத்துக்கான அத்தனை கடமைகளையும் கோயில்கள், தொண்டுநிறுவனங்கள், சமூகபொறுப்புள்ளவர்கள் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

புற்றுநோயால் வருந்தும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் வன்னிப் பகுதி மக்களுக்கு ஒரு புற்று நோய் காபபகம் யாழ்ப்பாணத்தில் பொம்மை வெளிப்பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

அதற்கென 25 பரப்பு நிலத்தை இரு சகோதரிகள் வழங்கியுள்ளார்கள். யாழ்ப்பாணத்திலே படித்து இங்கிலாந்திலே இருக்கின்ற மருத்துவர்கள் இப்புற்றுநோயாளரை அரவணைக்கும் காப்பகக் கட்டடத்தை அமைப்பதற்கு 50 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்கு வித்திட்டது இந்த மருத்துவ பீடம்தான். இவ்வாண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரமொன்று யாழ். போதனா வைத்தியசாலையில் பொருத்தப்பட்டது.

இந்த மருத்துவ பீடத்துக்கு உதவுவதற்கு பலபேர் தயாராக இருக்கிறார்கள். ஆயினும், தொடர்புகள் சரியாக இல்லாததால் உதவிகள் கிடைக்கவில்லை.

உலக சுகாதார நிறுவனம் அண்மையில் தாய்லாந்தில் நடத்திய மாநாடொன்றில் இலங்கையிலிருந்து சைவ மதப் பிரதிநிதியாக நான் கலந்துகொண்டேன். எச்.ஐ.வி எனப்படும் எயிட்ஸ் நோயாளர்கள் 20 லட்சம் பேர் தாய்லாந்தில் மட்டும் இருக்கின்றாகள். ஆன்மீகத் தலைவர்களே! வைத்தியர்களுடன் சேர்ந்து இந்த நோயாளர்களுக்குக் கருணை காட்டுங்கள் என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெற்றது.

அம்மாநாடு நடைபெற்ற காலத்தில் பல எயிட்ஸ் நோயாளர்களைச் சந்திக்கும் வாய்ப்புக்கிட்டியது. அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் பல வெளிநாட்டு மருத்துவர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றுவதை நான் என் கண்ணால் கண்டிருககிறேன். அங்குள்ள மத நிறுவனங்களில் பெரும் எண்ணிக்கையான எயிட்ஸ் நோயாளர்கள் பராமரிக்கப்படுகின்றனர். அவ்வாறான பணிகளை நாமும் மேற்கொள்ள முன்வரவேண்டும்.

இன்று இந்த மருத்துவபீடத்தின் தேவை என்ன என்பதை நான் அறிந்துள்ளேன். எதிர்காலத்தில் இந்த மருத்துவபீடத்தின் தேவைகளை நிறைவேற்ற என்னால் இயன்றவரை பாடுபடுவேன்" என்றார். (8)


Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7171658 முதல் 7182079 வரை
சீட்டிழுப்பு இல. 32 திகதி 13-05-2004

வெற்றி எண்கள் **4 5 4 3 7 6** சுப்பர் எண் **9**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,91,67,225/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,91,67,225/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 92 | 5,000/- | 4,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 923 | 500/- | 4,61,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,215 | 50/- | 4,60,750/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 91,325 | 10/- | 9,13,250/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/-. |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 91 | 1,000/- | 91,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 926 | 100/- | 92,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,131 | 20/- | 1,82,620/- |
| மொத்தம் | 1,11,722 | | 41,56,720/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 41,56,720/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,94,23,450/-**

தொடர் இல. 6204247 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மே 17 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7178979-3-63
7178606-5-67
7180058-1-02
7177385-6-10
7175400-8-33

# தமிழக மீனவருடனான சந்திப்பில் சிவாஜிலிங்கம், அடைக்கலநாதன்

## மன்னாரில் 20 ஆம் திகதி கலந்துரையாடல்

வடமராட்சி,மே15

வடபகுதி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையே கடற்றொழிலில் இருந்துவரும் பிரச்சினைகள், இந்திய மீனவர்கள் வட கடலுக்குள் அத்துமீறுவது ஆகிய விவகாரங்கள் தொடர்பாக இந்திய மீனவப் பிரதிநிதிகளுக்கும் வடபகுதி மீனவர்களுக்குமிடையே இடம்பெறும் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவிக்கவுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் எஸ்.பி.அருளானந்தம் தலைமையில் 20 பேர் கொண்ட இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி மன்னாருக்கு வருகின்றனர்.

மன்னாரில் நடைபெறும் கலந்துரையாடலில் வைத்தே எம்பிக்களான எம்.கே. சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்.

இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து யாழ். குடாநாட்டு மீனவர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளும். (ஐ-173)

# சோனியாவுக்கு சங்கரி வாழ்த்துச் செய்தி

கொழும்பு, மே15

இந்தியாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்வெற்றியீட்டியிருப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் செய்தி ஒன்றை அவர் திருமதி சோனியா ராஜீவ்காந்திக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

தங்களின் பெருமைக்குரிய மாமியார் இந்திராகாந்தியும், அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய கணவர் ராஜீவ் காந்தியும் தமிழர்களின் விவகாரத்தில் பெரிதும் உதவியுள்ளனர். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரதம மந்திரியாக பதவியேற்கும் நீங்கள், உங்களின் கணவரின் கனவுகளை நிறைவேற்றுவதோடு, இந்தியாவிற்கு மட்டுமல்லாமல், அயல் நாடுகளுக்கும் உதவக்கூடிய வகையில் புதுயுகத்தை உருவாக்க வீர்கள். பல ஆண்டுகள் நீதியான , நியாயமான தங்கள் ஆட்சி நிலைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். நகர மத்திய பகுதியின் நெருக்கடிகள் குறித்து ஆய்வு

யாழ்ப்பாணம்,மே15

யாழ். நகர மத்திய வியாபாரப் பகுதியில் இன்றைய நிலைமை மற்றும் அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பான கள ஆய்வு ஒன்றில் யாழ் பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று ஈடுபடவுள்ளது.

மூத்த புவியியல்துறைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் திட்டமிடல் கற்கைநெறி மாணவர்கள் 37 பேர் இன்று முதல் இந்தக் கள ஆய்வைத் தொடக்குகின்றனர்.

யாழ். நகர மத்திய வியாபாரப் பகுதியில் நிலப்பயன்பாடு, போக்குவரத்து, இடநெருக்கடி, யாழ். பஸ் நிலைய அமைவிடம் போன்ற விடயங்கள் இந்தக் களப்பயிற்சியின் போது கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நெருக்கடி மிகுந்த யாழ். நகரின் மையப்பகுதியின் எதிர்கால விரிவாக்கத்துக்கு இந்தக் கள ஆய்வின் பெறுபேறுகள் பெரிதும் உதவும் என்று நம்பப்படுகிறது. (ஐ)

# கட்டுநாயக்காவுக்கு விரைவு ரயில் சேவை

20 நிமிடங்களில் கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் செல்லக் கூடியவாறு, நவீன ரயில் சேவை ஒன்றை அமைத்துக் கொடுக்க சீன அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

விமான நிலைய சேவைகள் தொடர்பான நிறுவனம், ரயில்வேத் திணைக்களம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை என்பன ஒன்றிணைந்து இப்புதிய ரயில் சேவையை ஆரம்பிக்கவுள்ளன.

இப்புதிய ரயில் சேவையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை சீன நாட்டு நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டைக்கும் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கும் இடையில், இரட்டை ரயில்ப் பாதைகள் அமைக்கப்படவுள்ளன. கொழும்பு, சீதுவை மற்றும ஜாஎல ரயில் நிலையங்களுக்குச் சமீபமாக பெரும் இடப்பரப்பில் வாகனத தரிப்பிடங்களை அமைக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், விமானப் பயணப பொதிகள், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலேயே சுங்கப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன. (ஐ)

# மானிப்பாய் பி.சபையிலிருந்து 8 அலுவலர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,மே15

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் இருந்து 8 பேர் புதிய வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம பெற்றுச் செல்கின்றனர்.

இந்த இடமாற்றங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றன.

புதிய சேவை நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்பவர்களின் பெயர் விபரமும் அவர்கள் பணியாற்றவுள்ள புதிய அலுவலகங்களும் வருமாறு - இ.பரமநாயகம் (எழுதுநர்)- கோப்பாய் சுகாதார வைத்திய அலுவலகம், எஸ்.மனோகரன் (எழுதுநர்) - வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம், திருமதி பே.சுகுமார் (எழுதுநர்) - சுழிபுரம் பிரதேசசபை, பே.ஞானசூரியர் (எழுதுநர்) - சுழிபுரம் பிரதேச சபை, எஸ் விஜயரடணம (எழுதுநர்) -யாழ்.வலயக் கல்வி அலுவலகம், தநாதசொரூபன் (எழுதுநர்) - வலிகாமம் கல்வி அலுவலகம், திருமதி பு.சந்திரசேகரம் (எழுதுநர்) - மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை; ந.ஜெயசீலன் (தொ.நு.உ) - யாழ் கட்டடத் திணைக்களம் (மாகாணம்). (ஐ-185)


**இன்றைய வெளியீடு**

**VCD Song**

கில்லி
குத்து
உதயா

விலை 100/=

விற்பனையாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**மூர்த்தி வீடியோ**

மானிப்பாய்.
T.P.: 222 2884 (C/34972)



**ஜோ எகட்டனின் ஜெசித்தாரா**

உங்கள் விருந்தகம் தரும்

**சைவ சிக்கன் புரியாணி**

ரூபா 160/= மட்டுமே!
முதலில் பதிவு செய்தவர்களுக்கு முதலில்! மற்றும் உணவுப் பொதிகள் வழமைபோல் 11.30 முதல் 3.00 மணிவரை.

மனைக்கு வெளியே ஒரு மனை
ஜெசித்தார (சி-35006)(36)
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஒழுங்கை
சுண்டுக்குளி 222 7227



**கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்**

**ஆண்டு நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் - 2004**

காலம்:- 15.05.2004 சனிக்கிழமை மாலை 4.00 மணி
இடம்:- சம்மேளன முன்றில்
தலைமை:- ந.பிரேமகாந்தன் (தலைவர், கோ.பி.இ.க.)
பிரதமவிருந்தினர்:- கௌரவ க.பிரேமச்சந்திரன் (நா.உ.யாழ்.மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்:- கௌரவ செ.கஜேந்திரன் (நா.உ.யாழ்.மாவட்டம்)
திரு.க.இராசதுரை (உதவிப் பிரதேச செயலர் கோப்பாய்)
கௌரவவிருந்தினர்:- திரு.து.கிரி (மாணவர் அமைப்பு, கோப்பாய் பிரதேசம்)
திரு.தி.சிவதெட்சணாமூர்த்தி (மாவட்ட இயக்குநர், தே.இ.சே.ம.)

கோப்பாய் பிரதேச
இளைஞர் கழகத்தினர்.

(C/35002)(16-18-36)



**தவறிவிட்டது**

இல.221, கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியஐயர் வெங்கடசரண்யன் என்பவருடைய தே.அ.அ (இல. 832784494V) யும், Sim Card மற்றும் சிறு தொகைப் பணம் என்பன அடங்கிய பேர்ஸ் நேற்றுமுன்தினம் நல்லூர் பின் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.: 021-222 7223, 0777 - 245472
(31994)(38)



**லக்சுமி** இணுவில்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு



சூர்யா (2வேடங்கள்) ஜோதிகா நடித்த மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்

**பேரழகன்** (ரீல்ஸ்)

தினசரி 11.00,3.00,7.00 இரவு 10.00 (பு.நே)

ஆசனப் பதிவுகளுக்கு: இணுவில் - லக்சுமி சினிமா
யாழில் - செல்வா மினி.



**ராஜா** யாழ்ப்பாணம்

3 ஆவது வெற்றி வாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு



விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த

**கில்லி** (ரீல்ஸ்)

10.30.,2.30,6.30, 9.30 (பு.நே.)

21 ஆம் திகதி முதல் **ஆய்த எழுத்து**

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(C/34517)(22)



**நிர்மலாஸ்** சங்கானை



விஜய்,சினேகா, நாசர் நடித்த

**வசீகரா**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு (பு.நே)
ஜேம்ஸ்பாண்ட் நடித்த
THE WORLD IS NOT ENOUGH

(சி.34420)(12)



**நாகம்ஸ்** சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்

விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த



**அருள்** மூன்றாவது வெற்றிவாரம்

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதித் திகதி வரை நுழைவுச்சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்

1) துவிச்சக்கரவண்டி
2) C.D பிளேயர்
3) மேசை மின்விசிறி

(C34180)(22)





சுன்னாகம்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான சகோபுரக் காட்சி

**சப்பரத் திருவிழா**

இன்று (15-05-2004) சனிக்கிழமை
மாலை 3.00 மணி - விசேட அபிஷேகம், பூஜை, மகாயாகம்,
மாலை 5.30 மணி வசந்த் மண்டபப் பூஜை சுவாமி உள்வீதியுலா,
மாலை 6.30 மணி மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் எம்பெருமான் விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள் சகிதம் இடபவாகனத்தில் எழுந்தருளி ஆரோகணித்து சகோபுரக் காட்சி நிகழும்.

**விசேட மங்கள இசை:**

01. இணுவையூர் N.R.கோவிந்தசாமி புதல்வர் நாதஸ்வர வித்துவான் K.இரத்தினகுமார் குழுவினர்.
02. இணுவையூர் நாதஸ்வர வித்துவான் K.வாகீஸ்வரன் குழுவினர் .

அடியார்கள் அனைவரும் வந்து பெருமானைத் தரிசித்துய்யுமாறு வேண்டுகின்றோம்.

லஷ்மி விலாஸ்,
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். (சி-35007)(16-18-36)

விழா உபயகாரர்கள்.



**Jaffna Municipal Council**
**Public Library**
**Vacancy**
**Post of Network Administrator on Contract Basis**

Application will be received from eligible candidates for the post of Network Administrator for the Programme in the Computerize the Jaffna Public Library under UNESCO Project. The job involves Net work maintenance, Trouble shooting, Antivirus updating, etc...

**Qualifications**
a) Have a Good command of English
b) Bachelor Degree in Computer Science or IT field
c) Be a resident of Jaffna

**Job description**
a) Act as Manager of Local area Networks
b) Train staff IT and Internet use.
c) Attend day to day problems including Virus Applications
d) Advise management regarding upgrading IT issues
e)Provide management with creative ideas to enhance linkages to National, Regional and International Networks.
f)Write Proposals for grant funding facilities on IT issues
g)Publicized the IT and other facilities available in the Library

**Experience**
a) Minimum of 03 years experience in Network Applications and in the related field

**Condition of Service**
This is purely contract service, after the UNESCO Project completed this post will be Suppressed

**Salary**
Rs 15000/- to 20000/- per month -: Depending on. **qualifications and experience.**

Applications should be prepared by the applicant with the Bio-Data and sent to the Municipal Commissioner Jaffna on or before 25.05.2004

E. Ramalingam
Municipal Commissioner,
Municipal Council, Jaffna.
(சி-35004)(36-16-18)



**முகாமையாளர் தேவை**

எமது நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த முகாமையாளர் தேவை. விவரங்களுடன் 28.05.2004ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:-
உரிமையாளர்,
இன்ரர்நாஷனல் ஹாட்வெயர்,
285, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (31984)(36-16-18)


**கண்ணீர் அஞ்சலி**

எமது அலுவலகத்தில் கடமையாற்றிய முன்னாள் கிராம அலுவலராகிய

**எஸ்.கே.சிவனடியான்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
உதவி அரச அதிபர் பணிமனை,
நெடுந்தீவு.

உதவி அரச அதிபரும் உத்தியோகத்தர்களும்.
(31992)(40-16-18-36)





மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுக் கிளிநொச்சியில் இருந்து வழியனுப்பிவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# மதியுரைஞர் பாலா லண்டன் பயணம்

கிளிநொச்சி,மே15

சமாதான முயற்சிகள் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக கிளிநொச்சிக்கு வந்திருந்த விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது துணைவியார் சகிதம் நேற்று லண்டன் புறப்பட்டார்.

நேற்றுக் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த விமானப் படையின் ஹெலியில் அவரும் அவரது துணைவியாரும் கட்டுநாயக்கவுக்குப் புறப்பட்டனர்.

அவரை வழியனுப்பும் நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, கல்வித்துறைப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தளபதிகளான கேணல் தீபன், கேணல் துர்க்கா, கேணல் விதுஷா ஆகியோர் உட்படப் பெரும் எண்ணிக்கையான போராளிகள் கலந்துகொண்டனர்.

நேற்று நண்பகல் 1.45 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பாலசிங்கம் தம்பதியர் லண்டன் புறப்பட்டனர். (ஐ-க-7-9)

## தமிழ்க் கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகளை ஜனாதிபதி குமாரதுங்க அவசர அவசரமாக - சுறுசுறுப்பாக - முன்னெடுக்கத் தொடங்கினார்.

தொலைபேசி மூலம் நோர்வேப் பிரதமருடன் பேசினார்; நோர்வேத் தூதுவருடன் கலந்துரையாடினார்; நோர்வே அனுசரணைக் குழுவுக்கு அழைப்பு விடுத்தார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முயற்சிகள் முழு மூச்சில் முடுக்கிவிடப்பட்டன. நோர்வே அனுசரணையாளர்கள் கொழும்புக்கும், வன்னிக்கும் இடையே ஹெலியில் பறந்தனர்.

புலிகளின் அடிப்படை நிலைப்பாடுகளுக்கும் ஜனாதிபதி இணங்கினார்.

பேச்சுக்களுக்கு புலிகளும், அரசும் இணங்கியிருப்பது பற்றிய நோர்வேயின் கூட்டறிக்கை எந்தக் கணத்திலும் வெளியாகும் என்ற நிலைமை இப்போது.

'புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைப் புதிய அரசு ஆரம்பித்துள்ள நிலையில், அந்த அரசின் பிரதிச் சபாநாயகர் வேட்பாளருக்கு எதிராக வாக்களிப்பது எப்படி? எனவே, வாக்களிப்பில் நடுநிலைமை பேண வேண்டியதுதான்' - என்ற நிலைக்கு கூட்டமைப்பினர் தள்ளப்படுவர் என ஜனாதிபதி கணக்குப் போடுகின்றார்.

அதேபோன்று சமாதானப் பேச்சு நடப்பதுபோல 'பாவ்லா' காட்டினால் உதவும் நாடுகள் சமூகத்திடமிருந்து அதிகம் 'கறக்கலாம்' என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டம் தீட்டியுள்ளார் என்று கருதப்படுகின்றது.

ஆனால், இப்படித் தம்மை நெருக்கடிக்குள் மாட்டுவதன் மூலம் பிரதிச் சபாநாயகர் தெரிவில் அரசுத் தரப்புக்கு ஆதரவாகச் செயற்படும் வகையில் - குறைந்த பட்சம் எதிராக வாக்களிக்காமல் இருக்கும் வகையில் - செய்து விடலாம் என்று ஜனாதிபதி கருதுகிறார் என்பதைக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

"எது, எப்படியென்றாலும் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் இவ் விவகாரத்தில் புலிகளின் தலைமையின் கருத்தை அறிய இருக்கின்றோம். அதன் பின்னர் 17ஆம் திகதியன்று - அதாவது பிரதிச் சபாநாயகர் தெரிவுக்கு முதல்நாள் - நாம் ஒன்றுகூடி, பிரதிச் சபாநாயகர் தெரிவில் எப்படி நடந்துகொள்வது என்பது குறித்து இறுதி முடிவெடுப்போம்" - என்றார் தமிழ்க் கூட்டமைப்பின் ஓர். எம்.பி.

பிரதி சபாநாயகர் தெரிவில் அரசுத் தரப்பு வேட்பாளரைக் கூட்டமைப்பு எம்பிக்கள் எதிர்க்காமல் இருந்தால் அவர் சுலபமாக வெற்றியீட்டி விடுவார் என எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

## கிணற்றடியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் இடம்பெற்றுவரும் கட்டட வேலையில் பணியாற்றுபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. அங்கு இவர்கள் தற்காலிகமாகத் தங்கி நின்ற வீட்டில் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்கிறது.

கிணற்றடிப் பகுதியிலிருந்த கல் ஒன்றில் ஒருவர் ஏறியபோது அது வெடித்துச் சிதறியது என்று கூறப்படுகிறது. (ஐ-9-7-6-ரி-86)

## மோ.சைக்கிளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் வீசியது என்று கூறப்படுகின்றது. அத்துடன் அந்நபர் பயணித்த புத்தம் புதிய 'பல்ஸர்' ரக மோட்டார் சைக்கிளையும் தீ முட்டி எரித்தனர்.

தாக்கப்பட்டபின் வீதியில் வீசப்பட்ட நபர் யாழ். ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. இவர் பின்னர் நேற்றிரவு யாழ். பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் எஞ்சிய பாகங்களும் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தாக்கப்பட்ட நபர், ஏற்கனவே பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவந்தவர் என்று யாழ். பொலீஸார் தெரிவித்தனர்.

இவரை யார் தாக்கினார்கள் என்பது தெரியவில்லை. குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்களின் கும்பல்களுக்கு இடையிலான மோதலாக இச்சம்பவம் இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

யாழ். பொலீஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஐ.பி. விக்கிரமரத்ன தலைமையில் சம்பவ இடத்துக்கு உடனடியாகச் சென்ற பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-9-7)

## கதிர்காமருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயந்த தனபாலவின் நியமனம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புடையதான சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகமாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராகவும் ஜயந்த தனபால 2004 ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இரு நியமனங்களுக்குமான பணிகளின் போது ஜயந்த தனபால வேதனம் எதுவும் பெறாது கௌரவ அடிப்படையில் நேரடியாக ஜனாதிபதியின் கீழ் சேவையாற்றுவார்.

ஜயந்த தனபால அவர்கள் 1998 முதல் 2003 வரை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் கீழ் படைக்கலக் குறைப்பு சம்பந்தமான விவகாரங்களில் ஈடுபட்டிருந்தார். இலங்கையின் வெளிநாட்டுச் சேவையில் நீண்டகாலம் சேவையாற்றியுள்ள ஜயந்த தனபால, ஜெனீவா, வாஷிங்ரன் ஆகிய நாடுகளில் இலங்கையின் தூதுவராகவும் கடமையாற்றியுள்ளார் - என்று உள்ளது. (ஐ-க)

## நோர்வே அனுசரணையாளர்களுக்கு இது கல்யாண 'சீஸன்'!

இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணியாற்றும் நோர்வே அரசின் மூத்த உறுப்பினர்களுக்கு இது திருமண 'சீஸன்' போலும்.

நிலுவையில் நின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் சூடாக - சுறுசுறுப்பாக - மீண்டும் ஆரம்பமாகும் சூழ்நிலை ஒருபுறம் தோன்றியிருக்க -

மூத்த அனுசரணையாளர்களின் நிலுவையில் இருந்த திருமணங்கள் நடந்தேறும் சூழ்நிலை மறுபுறம் ஏற்பட்டிருக்கிறது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரே இனப்பிரச்சினையில் இருந்து இலங்கையை விடுவிக்கும் முயற்சியில் மும்முரமாக முனைந்துகொண்டு மறுபுறத்தில் தாமே திருமணப்பந்தத்தில் சிக்கப் போகிறார்கள்.

எரிக் சொல்ஹெய்ம் ஏற்கனவே திருமணமாகி விவாகரத்துப் பெற்றவர். பின்னர் தமது இரண்டாவது துணைவியாருடன் ஒன்றாக வசித்து வருபவர். அவர்கள் இருவருக்கும் இலங்கையில் இதற்கு முந்திய பொதுத் தேர்தல் நடந்த 2001 டிசெம்பர் 5ஆம் திகதி அன்று ஓர் ஆண் குழந்தை பிறந்திருந்தது. ஒன்றாக வாழ்ந்து வந்த ஜோடி இன்று சனிக்கிழமை ஒஸ்லோவில் உத்தியோகபூர்வமாகவும், சம்பிரதாயபூர்வமாகவும் திருமணம் செய்கின்றது.

பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸனின் மனதைக் கவர்ந்த பெண் சுவீடன் நாட்டவர். ஒரு சட்டத்தரணி. தற்போது லண்டனில் தொழில் பார்தது வருபவர். இந்தக் காதல் ஜோடிக்கு இடையிலான திருமணம் இன்னும் ஆறு வாரங்களில் அதுவும் ஒரு சனிக்கிழமையன்று ஜூலை 3ஆம் திகதி லண்டனில் நடைபெறுகின்றது.

அச்சமயத்தில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் தம்பதியரும் லண்டனில் இருப்பார்களாயின் அவர்கள் கூட இந்தத் திருமணத்தில் கலந்துகொள்ளக் கூடும் என எதிர்பார்க்கலாம். (க)

## சமாதான முயற்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதித் தீர்வு எடுப்பதற்காக ஜூன் மாதம் எமது குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யும். இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பாக இந்தக் குழுவின் இறுதி அறிக்கையின் படி செயற்படுவோம்.

இலங்கையில் ஜனநாயக ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் கொள்கை ஆகும்.

இலங்கையில் சுபீட்சம் பிறக்க வேண்டுமாயின் பிணக்கு முடிவுக்கு வர வேண்டும். அரசாங்கமும் புலிகளும் மீள் அர்ப்பணத்தோடு வெற்றிகரமான சமாதான முன்னெடுப்புக்களின்பால் ஈடுபட முடியுமாயின் துரித அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமான பாதையில் இலங்கை முன்னேறமுடியும்.

சமாதானம், சுபீட்சம் என்பனவும் ஸ்திரத்தன்மை என்பதும் உண்மையில் ஒன்று மற்றொன்றுடன் பின்னிப் பிணைந்தவைதான் என பிலடெல்பியாவில் உள்ள பென்ஸில்வேனியா பல்கலைக்கழகத்தில் மூன்று வாரங்களுக்கு முன்னர் நான் பேசியதை இங்கும் நினைவு கூருகின்றேன். இலங்கையிலும் இப்பிணைப்பு வேறு எங்கு விடவும் வேறுபட்டதல்ல.

அமெரிக்க அரசும் இலங்கை அரசும் சமாதானம், சுபீட்சம் என்பனவற்றின் நோக்கங்களைப் பகிர்ந்துகொள்கின்றன. அத்தகைய நோக்கங்களின் பால் இணைந்து செயற்படுவதே எமது எதிர்பார்ப்பு.

சமாதானம், போரின் இடத்தைப் பிடித்துக்கொள்வதால் விரிந்த, செயற்றிறன்மிக்க உறவுகளை எமக்கிடையே பல துறைகளில் வலுமிக்கதாக்க முடியும்.

வர்த்தகம், ஏனைய வணிகச் செயற்பாடுகள், கல்வி, கலாசார நிபுணத்துவப் பரிமாற்றம் போன்ற துறைகளிலும் உறவை வலுப்படுத்தமுடியும்.

சமாதான முன்னெடுப்புக்கள் முன்நோக்கி நகர்ந்தால் தவிர, இவற்றைச் சாத்தியப்படுத்த முடியாது என்பதையும் அழுத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இலங்கையில் ஒரு வருடமாக நேரடிப் பேச்சு நிகழாதபோதும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரு வருடங்கள் கடந்துள்ளன. இப்போது சமாதான முன்னெடுப்புக்கள் முன்நோக்கி நகர்கின்றன. நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரலில் நடந்தது. அதனை சுதந்திரமானதாகவும், நேர்மையானதாகவும் நடத்தியதற்காக இலங்கையர்களுக்கு வாழ்த்தும் தெரிவிக்கின்றேன் - என்றார் கிளிஸ்ரினா றொக்கா.

தம்மை வரவேற்றமைக்கு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் அவர் தமது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தார். (ஐ-7-9)

## மாவீரருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. ஈகச்சுடரை தமிழினியனின் தந்தையார் பாலையா ஏற்றிவைத்தார். அவரது தாயார் மலர்மாலை அணிவித்தார்.

துயிலும் இல்லத்தைச் சேர்ந்த கண்ணன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் அரசியல்துறையைச் சேர்ந்த யாழவன் நினைவுரை ஆற்றினார். பிற்பகல் 5.45 மணியளவில் லெப். தமிழினியனின் பெற்றோர் நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ஐ-9)

## 47 அகதிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் நேற்று மன்னார் மாட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது 47 அகதிகளையும் அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு அனுப்பிவைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, அகதிகளைக் கரைக்குக் கொண்டுவந்த மீனவர்களைச் சரீரப் பிணையில் நீதிவான் விடுவித்தார். (ஐ-7)


**அறிவித்தல்**

பிறவுண் அன்ட் கம்பனிக்கு முன்னால் 08.05.2004 சனிக்கிழமை பிற்பகல் நிறுத்திவைக்கப்பட்ட **லுமாலா துவிச்சக்கர வண்டியை** எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

அதி உயர்ந்த பட்ச சன்மானம் வழங்கப்படும்.

முகவரி:
**பிறவுண் அன்ட் கம்பனி,
89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.பே.021 2225150, 0777 110791.
(சி-34980)(16-18)

**பெட்டி ஒலி இடமாற்றம்**

எமது திருமண சேவை அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க கச்சேரியடியில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள நியூ றெஸ்ற் கவுஸிற்கு இடமாற்றப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 - மாலை 5.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

S.பிறேமன்
0777 283795
(31995)

**LOGIC**
A/L 2006 பிரிவு SUN.-8a.m.
BY: P.கமல்
**BRIGHTMAN**
நாவலர் வீதி
(31962)

**BITSMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்
பிரிவு 3 O/L DAY CLASS
எமது வழமையான "SUPER GRADE" ஆசிரியர் குழு
★ வாரத்தில் கணித, விஞ்ஞான பாடம் 10 மணித்தியாலங்கள் நடைபெறுகின்றன
★ மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டமையால் அனுமதிக்கு முந்துங்கள்.
ஆரம்பம்: 17.5.2004 திங்கள் 8.00 a.m.
(31940)(38)

**தொலைபேசி இயக்குநர் தேவை**

தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலைசெய்யத் தகுதி வாய்ந்த இரு பாலாரும் தேவை. நேரில் வரவும். தெல்லிப்பழை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்புகளுக்கு:
**அம்பாள் தொலைத் தொடர்பகம்
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.**
(31988)(38)


**மரண அறிவித்தல்**

**இராசையா நல்லையா**

காளி கோயிலடி, தாவடி வடக்கைச் சேர்ந்த இராசையா நல்லையா (சின்னக்கிளி) அவர்கள் நேற்று (14.05.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*காளி கோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.* (சி-35002)

தகவல்:
ந.பிரகலாதன்
(கண்ணன் - மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.